Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் - 15 | திருவள்ளுவர் ஆண்டு - 2035 | மார்கழி-03 | 16-12-2004 | வியாழக்கிழமை | ஓசை - 304




# ஜே.வி.பி யினர் விளக்கம் தந்துள்ளபோதும்

# நமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

**- ஜப்பானியத் தூதுவர் அக்கியோசூடா தெரிவிப்பு**

**ஜே.வி.பி தமது கொள்கை விளக்கத்தை வழங்கியுள்ள போதும் தமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையென ஜப்பானியத் தூதுவர் அக்கியோசூடா தெரிவித்துள்ளார். ஜே.வி.பியின் நிலைப்பாடே சமாதான நகர்வில் தேக்கத்தைக் கொண்டுவந்திருப்பதாகவும் தெரிவித்தார்.**

அண்மையில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் தூதுவர்கள், சமாதான முயற்சிகளில் ஜே.வி.பி காட்டிவரும் நிலைப்பாடு தொடர்பாக சனாதிபதியிடம் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர். அத்துடன் நோர்வேயின் ஏற்பாட்டாளர் நிலையை ஜே.வி.பி விமர்சித்தமை தொடர்பாகவும் அவர்கள் தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் நேற்று முன்தினம் ஜே.வி.பி தமது நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதையே தாம் எதிர்ப்பதாக அது தெரிவித்திருந்தது. இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஜப்பானியத் தூதுவர், ஜே.வி.பி யின் இந்த நிலைப்பாடே சமாதான நகர்வில் தேக்கத்தைக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## நோர்வே வெளியேறின் யுத்தம் வரும்; சனாதிபதி சந்திரிகாவுக்கு எரிக் அறிவுறுத்து!

(கொழும்பு)

நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் என்ற நிலையில் இருந்து வெளியேறினால் யுத்தம் வரும் என்ற செய்தி சனாதிபதி சந்திரிகாவிடம் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்மினால் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் அமைப்பது தொடர்பான தனது தற்போதைய முயற்சியும் முன்னேற்றம் காணாத நிலையில் நாடுதிரும்பும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்குமாறும் இல்லையேல் முழு அளவிலான யுத்தத்திற்குத் திரும்பிச் செல்லும் ஆபத்தை எதிர்கொள்வீர்கள் என அரச தரப்பை எச்சரித்துள்ளதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

நோர்வே வெளியேறினால் யுத்தம் வரும் என்ற செய்தி சனாதிபதி சந்திரிகாவிடம் உறுதியாகவும், தெளிவாகவும் நோர்வேத் தூதுவரினால் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நோர்வே சிறப்புத் தூதுவருடன் ரவூப் ஹக்கீம் சந்திப்பு

நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சூல்கெய்ம் நேற்றுச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீமைச் சந்தித்துள்ளார்.

கொழும்பின் ஹில்டன் விருந்தகத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின்போது சமாதான நகர்வின் பிந்திய நிலை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. சுமார் 2 மணித்தியாலங்களாக இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுவது மற்றும் அதில் முஸ்லிம் தரப்பு மூன்றாவது தனித்தரப்பாகப் பங்கு கொள்வது போன்ற விடயங்கள் குறித்தே இதில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

## வீரச்சாவு

17.08.1999 அன்று யாழ்.மாவட்ட தென்மராட்சிக் கோட்டத்தில் மாமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். •

கப்டன் சர்வன்/களவொளி
(கோவிந்தசாமி-சண்முகதாசன்
பாலையூற்று, திருகோணமலை)
என்னும் போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

**- யாழ்.நாவலர் கலாச்சார மண்டபத்தில் -**

## வரலாறு தந்த வல்லமை பாடல் ஒலிப்பேழை அறிமுகம்

(அலுவலக செய்தியாளர்)

வரலாறு தந்த வல்லமை என்ற பாடல் ஒலிப்பேழை அறிமுக விழா இன்று யாழ்ப்பாணம் நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைக்கலைஞர் கண்ணனின் இசை அமைப்பில் உருவான வரலாறு தந்த வல்லமை என்ற பாடல் ஒலிப்பேழையே இன்று யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் முதல் ஒலிப்பேழையினை 1991 ஆம் ஆண்டு ஆனையிறவு படைத்தளத் தாக்குதலில் வீரச்சாவடைந்த கப்டன் அமுதினியின் தயார் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

அத்துடன் இவ் ஒலிப்பேழை உருவாக்கத்தில் பங்கேற்ற கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

### இந்தியா செல்கின்றனர்

ஆளும் மற்றும் எதிர்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 8 பேர் இந்தியா செல்கின்றனர். அமர்வு ஒன்றில் பங்குகொள்ளும் நோக்கிலேயே இந்த விஜயம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் ஜே.வி.பி யின் அமைச்சரான லால்கந்தவும் அடங்குகிறார். இந்தக் குழுவினர் இரண்டு கிழமை இந்தியாவில் தங்கியிருப்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## கைக்குண்டுகளுடன் இளைஞன் பொலிசாரினால் கைது

மட்டக்களப்பில் இளைஞர் ஒருவர் இரண்டு கைக்குண்டுகளை வைத்திருந்ததாகப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்.

வெருகலிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்ட இவர் காயாங்கேணியைச் சேர்ந்த வெள்ளைக்குட்டி தர்மகுமார் (வயது-25) என வாழைச்சேனை பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

இன்று மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி முன்னிலையில் இவர் ஆஜர்ப் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகக்
(12ஆம் பக்கம் பார்க்க)

### ஓமந்தையில் இளைஞர் கைது!

வன்னியிலிருந்து வவுனியாவிற்கு வந்த துணுக்காயைச் சேர்ந்த 20 வயதுடைய ஜி.கிருபாகரன் என்ற இளைஞர் நேற்றுமுன் தினம் மாலை ஓமந்தை சோதனைச் சாவடியில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் ரூபா 7 இட்சத்து 52 ஆயிரம் ரொக்கப்பணம் இருந்ததையடுத்து சந்தேகம் கொண்ட பொலிசார் இவரைக் கைது செய்துள்ளனர்.

**-கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்ட-**

## இந்திய அதிவேக விமானம் அவசரமாகத் தரையிறக்கம்!

இந்திய இலங்கை இராணுவக் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்ட விமானம் இந்தியாவில் அவசரமாகத் தரையிறக்கப்புட்டது. இந்திய இலங்கை கூட்டுப்பயிற்சி நேற்றுமுன்தினத்திலிருந்து தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நடைபெறுகின்றது. பயிற்சியின் ஆரம்பத்தில் பயிற்சியில் ஈடுபட்ட அதிவேக விமானம் விபத்திற்கு உள்ளான்தால் இந்தியாவின் கடற்படை விமானத்தளத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இந்தியாவின் கோவா பிராந்தியத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்பயிற்சியைப் பார்வையிட தமிழ் ஊடகவியலாளருக்கு அனுமதியில்லை

இலங்கை இந்தியக் கடற்படைகளின் கூட்டுப்பயிற்சி தொடர்பாக செய்திகளையும், புகைப் படங்களையும் நேரில் சென்று சேகரிக்க இலங்கையிலுள்ள அனைத்து ஊடகங்களைச் சேர்ந்தவர்களும், பயிற்சி நடைபெற்ற இடத்திற்கு கப்பல்களில் அழைத்துச் செல்லப்பட்ட போதிலும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட இரு நாடுகளினதும் அதிகாரிகள் தமிழ் ஊடகவியலாளர்களை திட்டமிட்டே புறக்கணித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**– சமாதான நடவடிக்கைகளை வலுப்படுத்தக் கோரி –**

## யாழ். இல் போராட்டங்கள் நடத்த வெகுசன அமைப்புக்கள் முனைப்பு!

(யாழ்ப்பாணம்)

சமாதான நடவடிக்கைகளை வலுப்படுத்தக்கோரி யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக வெகுசனப் போராட்டங்களை நடாத்த வெகுசன அமைப்புக்கள் பலவும் தயாராகி வருகின்றன.

இவ் வெகுசனப் போராட்டங்களின் ஓர் கட்டமாக வரும் திங்கட்கிழமையன்று தென்மராட்சிப் பகுதியினில் மனித சங்கிலிப் போராட்டங்கள் நடாத்த முற்பட்டுள்ளன. ஏ-9 வீதியினில் கொடிகாமம் முதல் கைதடி வரையான பகுதி வரை குறித்த தினத்தன்று தென்மராட்சிப் பகுதி மக்கள் ஒன்று திரண்டு இம் மனித சங்கிலிப் போராட்டத்தை நடாத்தவுள்ளனர். காலை 10 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெறவுள்ள இவ் வெகுசனப் போராட்டத்தின்போது தமது கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளை மக்கள் தாங்கியிருப்பரென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே வடமராட்சிப் பகுதியின் முக்கிய நகரங்களிலும், இதே போன்று போராட்டங்களை நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம் மாதத்தின் இறுதியில் 29ஆம் திகதியன்று இவ் வெகுசனப் பேராட்டங்களை நடாத்தத் தாம் தீர்மானித்திருப்பதாக வடமராட்சிப் பகுதி வெகுசன அமைப்புக்களினது வட்டாரங்கள் தெரிவித்தன. உரிய ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய நாளை வெகுசன அமைப்புக்களது பிரதிநிதிகள் நெல்லியடியில் கூடவுள்ளனர்.

இதே போன்று வலிகாமம்
(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது
புன்னை நீராவி தருமபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட சரணபதி பிள்ளை சுபாஜினி என்பவரின் தேசிய அடையாள அட்டை 16.12.2004 புதுக்குடியிருப்பு சந்திக்கும் றோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்குமிடையில் தவற விடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி-10529)

### வீடுவிற்பனைக்கு
புதுக்குடியிருப்பில் சுவையூற்றுக் கருகாமையில் 1/4ஏக்கர் காணி வீடு கிணறு, மலசலகூடம் என்பன வற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு உரிமையாளர் ''இனியவள் அழகுமாடம்'' முல்லைத்தீவு. உரிமையாளர் இன்பம் மணிக்கூட்டுத்திருத்தகம், புதுக்குடியிருப்பு. (5071)

### தவறிவிட்டது
சின்னத்துரை சுந்தரலிங்கம் 480522338v சுந்தரலிங்கம் பால்ராஜ் 813630141v தேசிய அடையாள அட்டை புளியங்குளத்திற்கும் கனகராயன் குளத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் (5414)

### விற்பனைக்குண்டு
நல்ல நிலையில் மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு இல.4 சிறி 4611 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி எஸ்.அருள்நாதன், இல 117, நாதன்ஸ் ,குட்செட் செட்றோட் வவுனியா. (5410)

### காணி விற்பனைக்கு
புதுக்குடியிருப்பில் சிவன் கோவிலுக்கு அருகாமையில் பொக்கணை செல்லும் வீதியில் 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு பொ.கந்தசாமி, விமல்ஸ் உரிமையாளர். (5070)

### நியூட்டன் அக்கடமி வட்டக்கச்சி
13.12.2004 ஆரம்பமாகுமென இருந்த தரம்-5 முதல் 11 வரையான புதிய வகுப்புக்கள் 20.12.2004 திங்கட்கிழமை காலை 8.00மணிக்கு ஆரம்பமாகும் என்பதனை அறியத் தருகின்றார் நிர்வாகி. (5411)

### பெற்றுக்கொள்ளவும்
தனித்தமிழ் டயறி, தினத்தாள் கலண்டர், மாதாந்த பஞ்சாங்கக் கலண்டர் மொத்தமாகவும், (விசேட கழிவு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உயர்ச்சி பொத்தகசாலை துணுக்காய்சாலை மல்லாவி. (4142)

## கிளி.மருத்துவ சங்க ஏற்பாட்டில் நோயாளர் பொழுதுபோக்கு மையம் திறப்பு

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் "சோஆ" (ZOA) நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட நோயாளர் பொழுதுபோக்கு மையத்திறப்புவிழா மற்றும் மருத்துவநூல் வெளியீடு, ஒளிவிழா நிகழ்வு நாளை மாலை 6.30 மணிக்கு கிளி.மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மருத்துவசங்கத் தலைவர் வைத்தியகலாநிதி பி.பிறைற்றன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் வைத்தியசாலைப் பணியாளர்கள் அன்றைய நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## துறைசார் அணுகுமுறையூடாக பாடசாலை மட்ட திட்டங்கள் தயாரித்தல்

துறைசார் அணுகுமுறை ஊடாக பாடசாலை மட்ட திட்டங்களை தயாரிப்பதற்கான கரைச்சிகோட்ட பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் கல்வி வள நிலையத்தில் 14.12.2004 நடைபெற்றது.

இதேபோன்ற செயலமர்வு பளை கோட்ட பாடசாலை அதிபர்களுக்கு இன்று பரந்தன் இந்து ம.வியிலும், நாளை பூநகரிக்கோட்ட அதிபர்களுக்கு பூநகரி ம.வியிலும், 20ஆம் திகதி கண்டாவளைக் கோட்ட அதிபர்களுக்கு கிளி.தருமபுரம் ம.வியிலும் நடைபெறவுள்ளது.

இத்திட்டம் 2006-2010ஆம் ஆண்டுக்குரிய பாடசாலைக்கு ...ான பௌதீக வளங்கள், ஆசிரிய வளங்கள், கல்வித்தரவிருத்தி போன்ற சகல திட்டங்களும் உள்ளடக்கப்படவிருக்கின்றன. இத்திட்டத்தினுடைய அடிப்படையிலேயே எதிர்காலத்தில் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன. அதிபர், ஆசிரியர்கள், மாணவ பிரதிநிதிகள், பெற்றோர் பிரதிநிதிகள் ஆகிய பாடசாலை மட்ட முகாமைத்துவக் குழுவினரால் இத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. இத்திட்ட செயற்பாடுகளுக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிதி நிறுவனங்களிலிருந்து நிதியுதவி கிடைக்கவிருக்கிறது. (14)

### தவறிவிட்டது
ஏகாம்பரம் சிவனேஸ்வரன் 191, 4ஆம் யுனிற் தருமபுரம் முகவரியுடைய எனது தேசிய அடையாள அட்டை 16.11.2004 ஆம் திகதி கட்டைக்காட்டிற்கும் தருமபுரம் பாடசாலைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம் தர்மபுரத்தில் ஒப்படைக்கவும். தகவல் ஏ.சிவனேஸ்வரன். (5412)

புங்குடுதீவு சிவலப்பிட்டி சன சமூக நிலைய அம்பாள் விளையாட்டுக்கழக

## கலந்துரையாடல்
வன்னி

புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூகநிலைய அம்பாள் விளையாட்டுக் கழக வன்னியில் இருக்கும் அங்கத்தவர்களால் நடாத்தப்படும் கலந்துரையாடல் எதிர்வரும் 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடாத்த இருக்கின்றோம். ஆகவே பு.சி.ச.ச.நி அங்கத்தவர்களைத் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பு.சி.ச.ச.நி அங்கத்தவர்,
கி.நித்தியானந்தன்.
புதுக்குடியிருப்பு.
(5413)

# FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA
## NOTICE
***First, Second and Third Examination in science -2004 (Second semester)***

The above Examinations will commence on the dates given below

| | |
|---|---|
| First Examination in science-2004 (Repeat) | 25.01.2005 |
| Second Examination in science -2004 | 03.02.2005 |
| Third Examination in science -2004 | 16.02.2005 |
| English as a second Language Examination (Essay writting)-2004 | 04.01.2005 |
| English as a second Language Examination (Writting) 2004 | 15.02.2005 |

The Repeat candidates are kindly requested to hand over their examination entry forms together with the receipt of the payment (Rs.50/-per unit) on or before 08.01.2005 For English as a Second Language Examination (written) seperate examination entry form will have to be submitted

Examination entry forms could be obtained from the office of the dean, Faculty of Science The Examination time-Table will be displayed on the Notice Boards.

**Vice- Chancellor**

(சி-10980)

*கனகபுரம் விளையாட்டுக்கழக அனுசரணையுடன் நடாத்தப்படும் அமரர் சத்தியதர்ஷன் பூஜிதா (பூஜா) ஞாபகார்த்த மென்பந்துத் துடுப்பாட்ட வெற்றிக்கேடயப் போட்டி*

## நேர அட்டவணை

1 .சோலை வி.க
2. உழவர் ஒன்றியம் வி.க
3. தூயதமிழ் வி.க
4. N.E.C B வி.க
5. இளந்தாரகை வி.க
6. கனகபுரம் B வி.க.
7. கிருஸ்ணபாரதி வி.க.
8. இளைஞர் வட்டம் வி.க.
9. கனகபுரம் A வி.க.
10. இளந்தென்றல் வி.க
11 ஸ்கந்தா வி.க
12. இளந்தளிர் வி.க
13. N.E.C. A வி.க

1: 18.12.2004 மு.ப.8.30
2: 18.12.2004 மு.ப.10.30
3: 18.12.2004 பி.ப 2.00
4: 19.12.2004 மு.ப.9.00
5: 19.12.2004 மு.ப.11.00
6: 19.12.2004 பி.ப.2.00
7: 20.12.2004 மு.ப.9.00
8: 20.12.2004 மு.ப.10.30
9: 20.12.2004 பி.ப.2.00
10: 21.12.2004 மு.ப.9.00
11: 21.12.2004 மு.ப 10.30
12: 23.12.2004 பி.ப. 2.00 (இறுதிப்போட்டி)

(சி-11039)

**கனகபுரம் வி.க**
**கனகபுரம், கிளிநொச்சி.**

## பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோருதல்

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தின் புதுமுறிப்பிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்திற்காக பின்வரும் பணிநிலைகட்கு தகுதியான ஆண்களிடமிருந்து மட்டும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

***கணக்காளர் பணிநிலை***

ஆகக் குறைந்தது க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியுடன் கணக்கியலில் திறமைச்சித்தியிருக்க வேண்டும். வயது 25இற்குமேல் 45இற்கு உட்பட்டு இருப்பதுடன் இத்துறையில் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

***மாணவர் வழிகாட்டி***

க.பொ.த உயர்தரத்தில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் சித்தி, குறிப்பாக கணித, விஞ்ஞான ஆங்கில பாடங்களைக் கற்பிக்கக்கூடியவராகவும் இருக்கவேண்டும். வயது 25 இற்கு மேல் 45 இற்கு உட்பட இருக்க வேண்டும்.

***களஞ்சியப் பொறுப்பாளர்***

க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சாதாரண சித்தி போதுமானது. அனுபவம் விரும்பத்தக்கது. வயது 25 இற்கு மேல்- 45 இற்கு உட்பட.

***காவலாளர்களும், பண்ணை பராமரிப்பாளர்களும்***

குறைந்தது 8 ஆம் வகுப்புச் சித்தியுடன் நல்ல தேகாரோக்கியம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். வயதெல்லை 35 இற்கு மேல் 50 இற்கு உட்பட இருத்தல் வேண்டும்.

***பொதுவான நிபந்தனைகள்***

சகல வேண்டுகையாளர்களும்
1. கிளிநொச்சி மாவட்டத்தின் நிரந்தரப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
2. இது சைவச் சிறுவர் இல்லமாதலால் சைவ உணவுதாரர்களாகவும் தொண்டு மனப்பான்மையுடனும், அர்ப்பணிப்புடனும் சேவை செய்யக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
3. ஒழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிபரம் அடங்கிய சுயமாகத் தயாரிக்கப்பெற்ற விண்ணப்பத்துடனும், கிராமசேவையாளரிடமிருந்து பெற்ற நற்சான்றிதழின் பிரதியுடனும், தங்களது கிராமத்திலுள்ள இரு பிரமுகர்களிடம் பெற்ற ஒழுக்கம், நடத்தை தொடர்பான சான்றுப் பிரதிகளையும் வேண்டுகையுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவஞ்சல் மூலம் தலைவர், மகாதேவ ஆச்சிரமம். ஜெயந்திநகர், கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு 10.01.2005 இற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும். முறைப்படி அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**மகாதேவ ஆச்சிரமம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**15.12.2004**

(சி.11037)

# பலஸ்தீன அகதிமுகாம் மீது தாக்குதல்

# 5 பலஸ்தீனர் பலி; 15 பேர் காயம்!

**-முகாம் அமைக்கவும் இஸ்ரேலியப் படையினர் திட்டம்**

**பலஸ்தீனத்தின் தெற்கு காஸாவில் உள்ள கான்யூனிஸ்ட் அகதி முகாம் மீது இஸ்ரேலியப் படையினர் நேற்று நடத்திய தாக்குதலில் 5 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 15 பேர் காயமடைந்தனர் எனப் பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.**



தாக்குதலுக்காக நகரும் டாங்கி

மோட்டார் தாக்குதலில் 11 இஸ்ரேலியப் படையினர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நடவடிக்கை பற்றி இஸ்ரேலியப் பாதுகாப்பு படைத் தளபதி ஒப்வின்ரர் இஸ்ரேலிய வானொலிக்குக் கருத்துத் தெரிவிக்கையில், "இஸ்ரேலிய சமூகத்தைப் பலப்படுத்த இவ் அகதி முகாமில் இஸ்ரேலியப் படையினர் முகாம் அமைப்பதற்கு தயார்ப்படுத்தப்படுகிறது" எனக் கூறியுள்ளார்.

காஸாப்பகுதியில் உள்ள ஜெவிஸ் இஸ்ரேலிய யூதக் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்படும் மோட்டார் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதும்



அச்சத்தால் வெளியேற்றம்

காஸாப்பகுதியில் உள்ள மேற்படி அகதிமுகாமில் தொடர்ந்து நிலைகொண்டுள்ள இஸ்ரேலியப் படையினர் கட்டடங்களை புல்டோசர்கள் மூலம் தரைமட்டமாக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இஸ்ரேலிய டாங்கிகளின் தாக்குதலிலும் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இப்படை நடவடிக்கையில் இஸ்ரேலியப்படையினர் எவரும் கொல்லப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன் தினம் இடம் பெற்ற இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

# ஐ.நா.தீர்மானம்

ஒவ்வொரு அரசாங்கமும் தமது மக்களை பாதுகாக்க தவறுகின்றவேளை மோசமான விளைவுகளை தடுப்பதற்காக படைபலத்தை பிரயோகிப்பதற்கு ஐ.நா. பாதுகாப்புச்சபை தயாராக இருக்கவேண்டுமென ஐ.நா.செயலாளர் நாயகம் கொபிஅனான் தெரிவித்துள்ளார்.

# ஈராக் விவகாரத்தில் தலையிடாதீர்!

## சிரியா,ஈரானுக்கு புஷ் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஈராக்கில் அடுத்த மாதம் (சனவரி) 30ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறது. அதற்கிடையில் அதன் உள் விவகாரத்தில் மூக்கை நுழைக்காதீர்கள் என்று சிரியாவையும், ஈராக்கையும் அமெரிக்க சனாதிபதி புஷ் எச்சரித்து இருக்கிறார்.

ஈராக் தீவிரவாதிகளுக்கு ஆயுதமும், பணமும் கிடைக்காமல் தடுப்பதன் மூலம் ஈராக் இடைக்கால் பிரதமர் அல்லாவிக்கு இந்த 2 நாடுகளும் உதவவேண்டும் என்றும் புஷ் கேட்டுக் கொண்டார். "ஈராக் உள் விவகாரத்தில் தலையிடுவது அவர்களின் சொந்த நலனுக்கு நல்லது அல்ல" என்றும் புஷ் எச்சரித்தார்.

# 352.4 கி.மீ வேகத்தில் புல்லட் ரயில்

## இயக்கி தென்கொரியா சாதனை

(சியோல்)

மணிக்கு 350 கி.மீக்கும் அதிக வேகத்தில் புல்லட் ரயிலை இயக்கி தென் கொரியா சாதனை படைத்துள்ளது.

வியாழக்கிழமை நடத்தப்பட்ட சோதனை ஓட்டத்தில் 352.4 கி.மீ. வேகத்தில் புல்லட் ரயில் இயக்கப்பட்டது. இதன் மூலம் அதிவேக புல்லட் ரயில்கள் தொழில் நுட்பத்துறையில் தென்கொரியாவும் இணைந்துள்ளது.

பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான் மட்டுமே மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் அல்லது அதற்கு அதிகமான வேகத்தில் ஓடும் புல்லட் ரயில்களை இயக்கி வருகின்றன. தற்போது அந்தப் பட்டியலில் தென்கொரியாவும் இணைந்துள்ளது.

கடந்த 8 ஆண்டுகளாக ரூ: 1800 கோடி செலவில் அதிவேக ரயில் தொழில் நுட்பத்தைத் தென் கொரியா உருவாக்கியது. அதன் பலனாகக் கடந்த ஏப்ரலில் தனது முதல் அதிவேக புல்லட் ரயிலை அது இயக்கியது.

தற்போது சொந்த தொழில் நுட்பத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ள தென்கொரியா 2007 முதல் ஏற்றுமதியிலும் ஈடுபடவுள்ளது.

# இஸ்ரேலியப் படையினர், குடியேற்றதாரரை

# காஸாப் பகுதியிலிருந்து வெளியேற்றத் தயார்!

**-இஸ்ரேலியப் பிரதமர் கூறுகிறார்**

காஸா முனையிலிருந்து இஸ்ரேலிய இராணுவத்தினரை குடியேற்றதாரரையும் அடுத்த வருடம் மீளப்பெறும் நடவடிக்கைகளை புதிய பலஸ்தீன தலைமைத்துவத்துடன் ஒன்றிணைந்து செயற்படுத்த தயாராக இருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாதுகாப்பு மாநாடொன்றில் உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், புதிய பலஸ்தீன சனாதிபதி தெரிவு செய்யப்பட்டதும் மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்ததுடன் காஸா முனையிலிருந்து இஸ்ரேல் வெளியேறும் முயற்சிகளையும் புதிய தலைவருடன் ஒன்றிணைந்து மேற்கொள்ள முடியுமென்றும் அவர் கூறினார்.

யசீர் அரபாத்தின் மறைவிற்குப் பின்னர் இஸ்ரேலிய பிரதமர் வெளியிட்ட இந்தக் கருத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

இருந்த போதிலும் புதிய பலஸ்தீன சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கருதப்படும் மகமூத் அபாஸ் கருத்து வெளியிடுகையில், காஸா முனையும் மேற்குக்கரையோரப் பகுதியும் முழுஅளவில் பலஸ்தீனியர்களுக்கு சொந்தமானவையென்றும் இந்த விடயத்தின் அடிப்படையிலேயே பேச்சுக்களை நடத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# உலகிலேயே பெரிய ஆற்றுப் பாலம்

(பரிஸ்)

பிரான்சு நாட்டின் மிலாவு நகரில் புதிதாக ஒரு ஆற்றுப் பாலம் கட்டப்பட்டுள்ளது. உலகிலேயே மிக உயரமான ஆற்றுப் பாலம் இது தான். தாரன் ஆற்றின் குறுக்கே இந்தப்பாலம் கட்டப்பட்டுள்ளது. ஆற்றுப் பள்ளத்தாக்கில் இருந்து 885 அடி உயரத்தில் இந்தப் பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. பிரான்சு சனாதிபதி ஜாக்சிராக் இந்த புதிய ஆற்றுப் பாலத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

# பலஸ்தீன சனாதிபதித் தேர்தலை கண்காணிக்க அமெரிக்க முன்னாள் சனாதிபதிக்கு அழைப்பு

பலஸ்தீன சனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் திகதி நடக்க இருக்கிறது. இந்த தேர்தலைக் கண்காணிப்பதற்காக வருகை தரும்படி அமெரிக்க முன்னாள் சனாதிபதி ஜிம்மி கார்ட்டருக்கு பலஸ்தீன தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

1979 ஆம் ஆண்டு எகிப்துக்கும்,இஸ்ரேலுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட கார்ட்டர் காரணமாக இருந்தார். மேற்கு ஆசியாவில் அமைதி ஏற்பட காரணமாக இருந்ததால் அமைதிக்கான நோபல் பரிசையும் பெற்றார்.

"அமெரிக்கர்கள், இஸ்ரேலியர்களின் கைப்பாவையாக இல்லாத ஒருவர் பலஸ்தீன தலைவராக வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று கார்ட்டர் கூறினார். 1996 இல் நடந்த பலஸ்தீன சனாதிபதி தேர்தலையும், இவரது கார்ட்டர் மையம்தான் பார்வையாளராக இருந்து நடத்தியது. மேலும் உலகம் முழுவதும் 50 நாடுகளில் நடந்த தேர்தல்களைப் பார்வையாளராக இருந்து கார்ட்டர் நடத்தி இருக்கிறார். கார்ட்டர் தலைமையிலான 80 பார்வையாளர்கள் உட்பட 600 வெளிநாட்டு பார்வையாளர்கள் இந்தத் தேர்தலைக் கண்காணிப்பார்கள்.

# பாகிஸ்தான் அணுமின்நிலைய விரிவாக்கம்!

## சீனா ரூ.1350 கோடி கடனுதவி

(பெய்ஜிங்)

பாகிஸ்தானில் உள்ள சாஷ்மா அணுமின் நிலையத்தின் 2ஆவது கட்ட விரிவாக்கப் பணிகளுக்காக சீனா ரூ.1350 கோடி கடனுதவி அளிக்கிறது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் சீன பிரதமர் வென்ஜியா போவும், பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸும் புதன்கிழமை கையெழுத்திட்டனர்.

குவாதார் துறைமுகத்தில் பெரிய கப்பல்களை நிறுத்தும் வகையில் அதை 14.7 மீற்றர்கள் ஆழப்படுத்தவும் இரு நாடுகளிடையே ஒப்பந்தம் எட்டப்பட்டது. இத் திட்டத்துக்கு ரூ.360 கோடிசெலவாகும். இத் திட்டத்தின் முதல் கட்டப்பணிகள் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் நிறைவு பெறும்.

பாகிஸ்தானில் பொருளாதார வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செய்வதற்கு சீனா கடன் அளிக்கவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. நான்கு நாள் அரசு முறைப் பயணமாக செவ்வாய்கிழமை இரவு பெய்ஜிங் வந்த பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ், சீனாவின் மிகப்பெரிய நகரமான ஷாங்காய்க்குச் சென்றார். ஷாங்காயில் கட்டப்படவிருக்கும் பாகிஸ்தான் தூதரகக் கட்டடத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை அடிக்கல் நாட்டினார்.

இரு நாடுகளிடையே தடையற்ற வர்த்தகம் மேற்கொள்வதற்கான சுட்டு ஆராய்ச்சியை விரைவில் முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் உணவுப் பொருள்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பான ஒப்பந்தமும் எட்டப்பட்டது.

பாகிஸ்தானில் பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுக் கிணறுகளைத் தோண்டுவது தொடர்பான ஒப்பந்தத்திலும் கையெழுத்திடப்பட்டது.



**பங்களாதேஷில் 33 ஆவது சுதந்திர தினவிழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. டாக்காவில் உள்ள பங்கபந்து தேசிய மைதானத்தில் நடந்த இந்த விழாவில் பள்ளி மாணவிகள் காவி உடையில் நாரதர் வேடமணிந்து நடனமாடியது பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.**


# தமிழர் ஒன்று பட்டு உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும்

### தெருவெளிநாடக மூடாக வவு.அரங்காலய பண்பாட்டுக்குழு அழைப்பு

(வவுனியா)

**தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஐக்கியப்பட்டு ஒன்றுபட்ட சக்தியாக திரண்டு நின்று உரிமைக்காகக் குரல் கொடுப்போம் என்ற தொனியில் வவுனியா அரங்காலய பண்பாட்டுக் குழுவினர் விடியலின் விம்பங்கள் என்ற தெருவெளிநாடகம் மூலமாக மக்களிடம் அழைப்பு விடுத்துள்ளனர்.**

வவுனியாவில் பலகிராமங்களுக்கு செல்லும் குழுவினர் அப்பகுதி மக்கள் மத்தியில் சமாதானத்தினை வலியுறுத்தி வருகின்றனர். தமது நாடகம் மூலமாக மிகத் தெளிவாக தமது கருத்துக்களை மக்களுக்கு விளக்கி அந்த மக்களிடம் இருந்து



கருத்துக்களையும் இந்தக் குழுவினர் கேட்டறிந்து கொள்கின்றனர்

அரசியல் வாதிகள் எவ்வாறு சிறுபான்மை மக்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துகிறார்கள் என்றும் அந்த மக்களிடையே உள்ள சிறு பிரச்சினைகளையும் பெரிதாக்கி அவர்கள் மத்தியில் எவ்வாறு பிரச்சினைகளை உண்டு பண்ணுகிறார்கள் என்பதையும் மேலாதிக்க அரசியல் வாதிகள் எவ்வாறு மதங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்துகிறார்கள் என்பதையும் சுருக்கமாக அரை மணி நேரத்தினுள் விளங்கப்படுத்துகிறார்கள். இந்த தெருவெளி நாடகம் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதே தமது நோக்கமாக இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றார்கள் நேற்றுமுன்தினம் இந்த தெருவெளி நாடகம் வவுனியா கிராம அபிவிருத்தி நிறுவனத்தில்



நடைபெற்றது அங்கு பொது மக்களும், முஸ்லிம் தமிழ் பேசும் இளஞர் யுவதிகளும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்

இந்த அரங்காலய பண்பாட்டுக் குழுவில் கிராம அபிவிருத்தி நிறுவனம், பெண்கள் அபிவிருத்தி நிலையம், திருகோணமலை மாவட்ட இளைஞர், அபிவிருத்தி அகத்தின் விடியல் அரங்கக்குழு உழைக்கும் பெண்கள் அமைப்பு கலைஞர்கள் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10,21)

# பாரிய குன்றும் குழியுமாகவுள்ள முள்ளியவளை- வற்றாப்பளை வீதி

(முள்ளியவளை)

முள்ளியவளை வற்றாப்பளை வீதி படுமோசமான பாரிய குன்றும் குழியுமாகவுள்ளதால் பயணிப்போர் பெரும் அவலப்பட்டு வருகின்றனர். வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட மேற்படி வீதியில்முள்ளியவளை அம்மன் சந்தியில் இருந்து பள்ளவெளி சந்திவரையான வீதி மிகவும் படுமோசமான நிலையில் கனமழை வெள்ளம் வீதியை குறுக்கறுத்து பாய்ந்து கிடங்காகவும் குன்றும்,குழியுமாகவும் உள்ளதால் அவ்வீதியூடாக, பயணிக்கும் மாணவர்கள் முதல் வியாபாரிகள் பாதசாரிகள் அவதிப்படுகின்றனர் மேற்படி வீதியில் அவ்விடத்தை தாண்டிச் செல்ல முடியாத நிலையில் பேருந்துகள் ஊர்திகள் குறுக்கு வீதியூடாகவே செல்வதால் அப்பகுதி பயணிகள் பேருந்துக்காக நீண்டதூரம் நடந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. (ஆ)

# இடம்பெயர்ந்தவர்களுக்கு சமைத்த உணவு வழங்கல்

(திருமுறிகண்டி)

மழைவெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து திருமுறிகண்டி இந்துவித்தியாலயத்தில் தங்கியுள்ள 207குடும்பங்களைச் சேர்ந்த 874 பேருக்கு மாங்குளம் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து திருமுறிகண்டி சமூக பொருளாதார குழுவும் கிராம அபிவிருத்திச்சங்கமும் சமைத்த உணவு வழங்கி வருகிறது.


இவர்களில் ஒருவயதிற்குக் குறைந்த 74 குழந்தைகள் உள்ளனர். (09)

# மழையால் இடம் பெயர்ந்த மக்களுக்கு த.சு.சேவையினர் விசேட மருத்துவ சேவை

(வட்டக்கச்சி)

பெய்து வரும் கடும் மழையினால் வட்டக்கச்சிப்பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்தோருக்கான விசேட மருத்துவ சேவை தமிழீழ சுகாதார சேவையின் ஒழுங்குபடுத்தலில் வட்டக்கச்சி மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் திருமதி. வீரபத்திப்பிள்ளை அவர்களால் கடந்த புதன்கிழமை தொடக்கம் ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்றது. இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பன்னங்கண்டி, மாவுவனூர், ஜொனிபுரம் ஆகிய பிரதேசங்களில் இடம் பெயர்ந்த மக்களுக்கு மருத்துவசேவையும் மற்றும் அங்கு தங்கியுள்ள மக்களுக்கு சுகாதாரக் கல்வி ஊட்டலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கல்வி ஊட்டலினை குடும்பநலன் சுகாதார உத்தியோகத்தர், பிரதேச இணைப்பாளர் ஆகியோர் இணைந்தே நடத்தி வருகின்றனர்.



முதலாம் நாள் மருத்துவ சேவையில் நோயாளர் 65 பேர் இவர்களில் பெரும்பாலானோருக்கு வைரஸ் காய்ச்சல், வயிற்றோட்டம் , முட்டு, சளி, சிரங்கு, இரத்தச்சோகை போன்ற நோய்களுக்கே சிகிச்சை வழங்கப்பட்டது. இவ் மருத்துவ சேவையானது ஒவ்வொரு நாளும் நடைபெறுமென வைத்திய அதிகாரி கூறியுள்ளார். அவசர சிகிச்சை பெறுவோரை அம்பியூலன்ஸ் மூலம் வேறு இடங்களுக்கு ஏற்ற வீதிகள் சீரின்மையால் பெரும் அவதியுற்று வருவதோடு இடம் பெயர்ந்தோருக்கான மூன்று வேளை சமைத்த உணவினை தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (12)

# ப.நோ.கூ.சங்கங்களுக்கான கோட்டாவை பிரிமா நிறுவனம் குறைத்ததால் நெருக்கடி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த கோதுமை மாவின் கோட்டாவை பிரிமா நிறுவனம் குறைத்துள்ளதால் தற்போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்கள் தங்களின் உணவுத் தேவையைப்பூர்த்தி செய்யமுடியாத நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் வர்த்தக, வியாபார மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள் ளேயிடம் முறையிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமைச்சருடன் தொலைபேசிமூலம் முறையிட்டுவிட்டுப் பின்னர் எழுத்து மூலமானமுறைப்பாட்டை பக்ஸ் மூலம் அவருக்குஅனுப்பி வைத்தார்.

"அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக பல கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் தேவாலயங்கள், கோயில்கள் மற்றும் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். இதனால் அவர்களின் உணவுத்தேவையைப்பூர்த்திசெய்வதற்கு கோதுமை மாவுக்குப் பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆனால் பிரிமா நிறுவனம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வந்த கோதுமை மாவு கோட்டாவையே குறைத்து விட்டது. இதுமேலும் பாதிக்கப்பட்ட மக்களின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத அளவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கோதுமை மாவின் கோட்டாவை உடனடியாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்" என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயைக் கேட்டுள்ளார். அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி சனாதிபதிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.(25)

# கிளிநொச்சியில் உணவகங்கள் சு.சேவையினரால் பரிசோதனை

### காலாவதியான பொருட்கள் அழிப்பு

ஏ-9 சாலையில் அமைந்துள்ள உணவகங்கள் கடந்த புதன் கிழமை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினராலும், பிரதேச சபையினராலும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது காலாவதியான உணவுப் பாணப்பவுடர்கள் பிஸ்கற்றுக்கள் மற்றும் பால்மா வகைகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் ஒரு தொகுதி கோழி இறைச்சி மற்றும் அயடின் கலக்கப்படாத உப்பு இன்னும் பல உணவுப் பொருட்கள் கைப்பற்றப் பட்டன இவற்றின் பெறுமதி சுமார் 25000/= இவை உரிமையாளர்களின் சம்மதத்துடன் கைப்பற்றி பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முன்னிலையில் தீயிட்டு அழிக்கப்பட்டது. ஒரு உணவகம் மூடப்பட்டதுடன் இன்னொரு உணவகம் தேனீரகமாகவும் மாற்றப்பட்டது. மேலும் பலஉணவகங்களில் கழிவு நீர் அகற்றல் பெரும் பிரச்சினையாக இருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. இது உடன் சீர் செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் தைமாதம் முதல் கிணறு பாதுகாப்பான மலசலகூடம் கழிவுக் குழி இல்லாத உணவகங்கள் தேனீரகமாகமாற்றப்படும் என்றும் கூறப்பட்டது.

# மேலும் 21 அகதிகள் நாடு திரும்பினர்

(மன்னார்)

தமிழ் நாட்டிலிருந்து மேலும் 21ஈழத்தமிழ் அகதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கடல் வழியாக தாயகம் திரும்பினார்கள் மீன்பிடி வள்ளமொன்றில் நாடு திரும்பிய இவர்கள் பழைய பியர் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.தலைமன்னார் பொலிசார் ஊடாக நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட இவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் சிவில் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

# சனாதிபதி என் மீதுவைத்துள்ள நம்பிக்கைக்கேற்ப செயற்படுவேன்-வடக்கு கிழக்கு புதிய ஆளுநர்

(திருகோணமலை)

"வடக்கு கிழக்கு நிர்வாகத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் முக்கிய அங்கமாக விளங்குகின்றது. விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கையில் தற்போது தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல. எனவே நாம் அவர்களையும் சேர்த்து வடக்கு கிழக்கு அபிவிருத்தியில் ஈடுபடக் கூடாது என்று சொல்வதற்குக் காரணம் ஏதும் இல்லை"

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ,கடந்த வியாழக்கிழமை வடக்கு கிழக்கு மாகாணசபையின் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் தலைவர்கள் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

" விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும் வடக்கு கிழக்கு அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ளார்கள். இணைந்து செயலாற்றும் போது யுத்தம் வரவேண்டிய தேவை ஏற்படாது நாட்டில் பிரிவினை என்ற பேச்சே வராது" என்றும் புதிய ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ கூறினார்.

"நான் எல்லாம் தெரிந்தவன் அல்லன் நான் இன்னும் நிறைய அறிந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்புடன் தான் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை ஏற்றுக்கொண்டேன். சனாதிபதி என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்ப நான் செயற்படுவேன் நான் 30 ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தேன் இப்போது தான் நான் முதற் தடவையாக சனாதிபதி சந்திரிகாவின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரிய வந்துள்ளேன்" என்றும் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார். (25)

# குருநகர் ஐஸ் கட்டித் தொழிற்சாலையை மீள அமைக்க கடற்படை மீண்டும் அனுமதி மறுப்பு

## -கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனம் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குருநகரில் உள்ள ஐஸ்கட்டித் தொழிற்சாலையை புனரமைத்து மீள இயக்குவதற்கு அப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா கடற்படையினர் தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருவதால் சுமார் 5ஆயிரம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் சங்க சமாச சம்மேளனத்தின் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்துள்ளார்.**

மேற்படி தொழிற்சாலை குருநகரில் நிலை கொண்டுள்ள கடற்படையினரின் இராணுவ அதி யுயர் பாதுகாப்பு வலயத்துள் காணப்படுவதால் அதனை புனரமைத்து மீள் இயங்க விடுவது, அங்கு நிலைகொண்டுள்ள படையினரது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதை காரணம் காட்டியே படையினர் இவ் ஐஸ்கட்டித் தொழிற்சாலையை புனரமைத்து மீள இயக்குவதற்கு அனுமதி மறுத்துள்ளனர்.

இதனால் சுமார் 5000 கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் இத்தொழிற்சாலையை புனரமைப்பதற்கென பல்வேறு பட்ட சர்வதேச அமைப்புக்களாலும் ஒதுக்கப்பட்டிருந்த 60மில்லியன் ரூபா நிதி கிடைக்காது போய் விட்டதாகவும் தெரிவித்த சமாசத்தலைவர், படையினரது இவ்வாறான ஆக்கிரமிப்பு அராஜக செயல்கள் கடற்றொழிலாளர்களது அபிவிருத்தியையும் தொழிற்றுறை மேம்பாட்டையும் பாதித்துள்ளதாகவும் அதிருப்தி தெரிவித்துள்ளார். (33)

# வடமராட்சியில் எல்லாளன் படை எச்சரிக்கைச் சுவரொட்டிகள்

யாழ். வடமராட்சியில் உள்ள பருத்தித்துறையில் சில இடங்களில் "எல்லாளன்படை" என்ற அமைப்பினது எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. கலாச்சார சீரழிவுச் செயல்களைக் கைவிடுமாறும் சமூக விரோத செயல்களை நிறுத்திக் கொள்ளுமாறும் இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் தேசியத்திற்கு எதிராக செயற்படுதல் தொடர்புகளை வைத்திருத்தல் என்பவற்றை உடன் நிறுத்திக் கொள்ளுமாறும் வலியுறுத்தும் விதமாக இச் சுவரொட்டிகள் அமைந்துள்ளன. (33,32)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குகளால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். விவசாயிகளுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என கமக் கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த சில நாட்களாக யாழ். குடாநாடு முழுவதிலும் பெய்து வந்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தென்மராட்சி, வலிகாமம் பகுதி விளை நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இதனால் இப் பகுதி விவசாயிகளுக்கு பல லட்சக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக யாழ். குடாநாட்டு விவ சாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே வெள்ளத்தால் உருவான பயிரழிவுகளால் நஷ்டத்தை எதிர் கொண்டுள்ள விவசாயிகளுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும் என யாழ்.மாவட்ட கமக்கார அமைப்புக்கள் கோரியுள்ளன. (33)

# சுழிபுரம்,மாதகல் கரையோரங்களில் படையினர் நிலைகளைப் பலப்படுத்தல்!

## - மீன்பிடித்தொழிலும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரம் மேற்கு மற்றும் மாதகல் ஆகிய பகுதிகளில் உள்ள கடற்கரை ஓரங்களில் படையினர்புதிய காவலரண்களை அமைத்து வருவதுடன் அப்பகுதிகளில் முட்கம்பி வேலிகளையும் அமைத்து வருகின்றனர். கடந்த சில தினங்களாக கடற்கரை ஓரங்களில் படையினர் மேற்கொண்டு வரும் பலப்படுத்தல் நடவடிக்கைகள் காரணமாகஅப்பகுதி கடற்பரப்புகளில் மீன் பிடிக்கச் செல்லும் கடற்றொழிலாளர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

அத்துடன் கடற்கரை ஓரங்களில் மின்குமிழ்களைப் பொருத்தி படையினர் ஒளிரவிட்டும் உள்ளனர். இவ்வாறான படையினரது நடவடிக்கைகளால் அப்பகுதியின் இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. (33)

# அரியாலையில் நிகொட் உப அலுவலகத்தை மூடிவிட சிறிலங்கா இராணுவம் வற்புறுத்து

யாழ். அரியாலை மத்தி, தெற்கு கிராம புனரமைப்புத் திட்டத்தை செயற்படுத்தி வரும் நிகொட் நிறுவனத்தின் அரியாலையில் அமைந்துள்ள உப அலுவலகத்தை மூடுமாறு சிறிலங்கா இராணுவம் பணிபபுரை விடுத்துள்ளது.

யாழ். அரியாலை மத்தி- தெற்கு கிராம புனரமைப்புத் திட்டத்தை நிகொட் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடை முறைப்படுத்தி வருகின்றது. இத் திட்டத்துக்கான உப அலுவலகம் ஒன்று அரியாலை A9 வீதியில் திறக்கப்பட்டு செயற்பட்டு வந்த வேளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அப் பகுதியில் இருக்கும் இராணுவம் இந்தக் காரியாலயத்தை மூடுமாறு வற்புறுத்தியுள்ளது. இதனால் இத் திட்டத்தை மேற்கொள்வதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கல்வியியல் முதுமாணி கல்வி டிப்ளோமா பரீட்சைகள்

பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் கல்வியியல்மாணிமற்றும் கல்வியி டிப்ளோமா பரீட்சைகள் முறையே எதிர்வரும் 20ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள் பரீட்சை அனுமதி அட்டை நேர அட்டவணை என்பவற்றை பீடாதிபதி அலுவலகம் உயர்பட்டப் படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாகத்தில் கற்கைகள் நெறியினைப் பின்பற்றும் மாணவர்கள் வவுனியா வளாக வியாபாரக் கற்கை பீட அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். அண்மையில் நடைபெற்ற அனுமதிப் பரீட்சையின் பெறுபேற்றுக்கமைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் கல்வியியல் முதுமாணி பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆகிய கற்கைநெறிக்குப் புதிய மாணவர்களை அனு மதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் முறையே எதிர்வரும் 20ஆம், 21ஆம், 22ஆம்,23ஆம் திகதிகளில் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தில்நடைபெறவுள்ளன. சம்பந்தப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் தபாலில் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அழைக்கப்பட்டோரின் பெயர்ப்பட்டியலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாமென பட்டப்பின் படிப்புக்கள் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

### விவசாய நுண்ணறிவு பயிற்சிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு விவசாயிகளிடையே விவசாய நுண்ணறிவுகள் சம்பந்தமான தொழில் நுட்பப் பயிற்சிகளை வழங்க நிகொட் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிப் படைந்துள்ள யாழ். விவசாயிகளின் தொழில்துறை மேம்பாடுகளுக் காகவே இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (33)

# கண்ணிவெடியுடன் கைதாகிய தொண்டரமைப்புப் பணியாளருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

முகமாலை இராணுவச்சோதனைச் சாவடியினூடாகவெடிபொருட்களை வானொன்றில் கடத்திவர முற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட கண்ணிவெடியகற்றல் தொண்டமைப்பின் பணியாளர்கள் மூவரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்று அனுமதியளித்துள்ளது.

முன்னதாகக் குறிப்பிட்ட ஹைஎஸ் வானில் வெடிபொருட்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் கண்ணிவெடியகற்றல் பிரிவின் பணியாளரான மைலன் மோகன் அல்லது செல்வம் என்பவரையும் 3ஆவது சந்தேக நபராக இவ்வழக்கினில் சேர்க்க வேண்டுமென கொடிகாமம் பொலிசார் சாவகச்சேரி நீதிமன்றில் விண்ணபித்திருந்தனர். இதையேற்றுக்கொண்டு 3ஆம் சந்தேக நபரான மைலன் மோகனையும் வழக்கில் சேர்க்க உத்தரவிட்ட நீதவான் பா.சுப்பிரமணியம், பின்னர் சந்தேக நபரை பத்தாயிரம் ரூபா பெறுமதியான சொந்தப் பிணையில் செல்ல அனுமதித்தார். இதனிடையே 3ஆம் சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்ட மைலன் மோகன் தாமாக முன்வந்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தினில் வாக்கு மூலமொன்றை முன்னதாக அளித்திருந்தார். அவ்வாக்கு மூலத்தினில் "கண்ணிவெடியகற்றல் பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களிற்கு கற்பிப்பதற்காகவே குறித்த மாதிரி வெடிபொருட்களை அவ்வாகனத்தில் வைத்திருந்ததாகவும் எனினும் அவசரமாக குறித்த வாகனத்தை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வந்திருந்த பணியாளர்கள் அதனை அகற்ற மறந்து விட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கடந்த 7ஆம் திகதி வெடி பொருட்களுடன் முகமாலையில் கைது செய்யப்பட்டிருந்த பணியாளர்களான நாகராசா ஜெயராசா மற்றும் மரியதாஸ் தேவசீலன் ஆகிய இருவரையும் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதவான் அனுமதித்துள்ளார். தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் சந்தேக நபர்களைச் செல்ல அனுமதித்த நீதவான் வாரத்தின் ஞாயிற்றுக்கிழமைகளில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி ஒப்பமிடவேண்டுமெனவும் பணித்திருந்தார். இந்நிலையில் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். ஸ்ரீகாந்த செய்த முறையீட்டின் பெயரில் மாதத்தின் இரு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அவ்வொப்பங்களை பொலிஸ் நிலையத்தில் வைக்க அனுமதியளித்த நீதவான், விசாரணைகளை அடுத்த ஆண்டின் தை 03ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (27)

# கிண்டல் செய்த இளைஞர்கள் இருவருக்கு வீதியில் வைத்துப் பாடம் புகட்டிய யுவதிகள்

## -யாழ். நல்லூரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் குழுக்களுக்கிடையே கைகலப்புக்கள் இடம்பெறு வது வழக்கமான விடயம்தான் ஆனால் இளைஞர்களுக்கும்- யுவதிகளுக்குமிடையே இடம்பெற்ற கைகலப்பு சம்பவம் ஒன்று கடந்த 13ஆம் திகதி யாழ் நல்லூர்ப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றித் தெரிய வரு வதாவது,

யாழ். நல்லூரிலுள்ள அம்மன் வீதியால் துவிச்சக்கர வண்டி ஒன்றில் சென்று கொண்டி ருந்த இருயுவதிகளை அதே வீதி யால் வந்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் கிண்டல் செய்து அவர்களுடன்தவறானமுறையில் அணுக முற்பட்டுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த பிரஸ்தாப இரு யுவதிகளும் தாம் ஓட்டி வந்த துவிச்சக்கர வண்டிகளை வீதி ஓரமாக நிறுத்தி விட்டு தம்மைக் கிண்டல் செய்து தவறான முறையில் அணுக முற்பட்ட இளைஞர்களுடன் வாக்குவாதத்தில ஈடுபட்டனர். இதனால் ஆத்திரமடைந்த இளைஞர்கள் பதிலுக்குத் தகாத வார்த்தைகளால் அவ்யுவதிகளை ஏசியுள்ளனர்.

இதனால் கோபமடைந்த இரு யுவதிகளும் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் மீது கண்மூடித்தனமாக கைகளாலும்,கால்களாலும் தாக்கினர். பதிலுக்கு இளைஞர்களும் தாக்கினர்.சம்பவம் கண்டு அப்பகுதியில் ஏராளமான மக்கள் குவிந்து விட்டதனால் அவ்:இளைஞர்கள் இருவரும் சம்பவ இடத்தை விட்டுத் தப்பியோடிவிட்டனர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக தமிழீழ பெண்கள் பண்பாட்டு மையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழீழ பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தமிழ்ப்பெண்களை தவறாக அணுக முற்படுவோருக்கு இது சிறந்த பாடம் எனவும் இளைஞர்களது அணுகு முறைகள் குறித்து விசனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சுகாதார தொண்டர்களுக்கு சிறுவர் நலன் பேண் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடமையாற்றி வரும் சுகாதார தொண்டர்களுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் சிறுவர் நலன் பேணும் சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுவர்களுக்கான நோய்த்தடுப்பு மருந்துகளை வழங்கல், சிறுவர்கள் சம்பந்தப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் இவை சம்பந்தமான விழிப்புணர்வு பிரச்சாரங்களை முன்னெடுத்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாகவே இப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான பயிற்சிகள் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக இடம் பெற்று வருகின்றன. (33)

# கிழக்காசியாவை உலுக்கிய பறவைக் காய்ச்சல்

கடந்த சில வருடங்களாக கிழக்காசிய நாடுகளை உலுக்கிய பறவைக் காய்ச்சல் பற்றி அநேக மானோர் பேசிக்கொண்டனர். எனினும் தற்போது அந்தப் பீதி குறைந்துள்ளது. இது உலகில் 50 மில்லியன் உயிர்களைப் பலிகொள்ளக் கூடியது என உலக சுகாதார நிறுவனம் கடந்தவாரம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிடில் இது வேகமாகப் பரவுவதைத்தடுக்க முடியாது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மனிதர்களிடம் இதுபற்றி உதாசீனப் போக்கையே காணக்கூடியதாகவிருக்கிறது. ஒரேயடியாக இது பரவும் என்பதை நம்புபவர்களாக இல்லை. அது பரவத் தொடங்கினால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை தோன்றும் என இங்கிலாந்தின் ரீடின் பல்கலைக்கழக வைரஸ் தொடர்பான நிபுணர் கலாநிதி இயன் முவர் கூறுகிறார்.


கடந்த வருடம் சார்ஸ் காய்ச்சல் தொடர்பாக அச்சமுற்றிருந்த ஆசிய நாடுகள் தற்போது அவ்வாறான காய்ச்சலை ஏற்படுத்தும் H5N1 வைரஸ் பரவுவதாகக் கூறப்படுகின்றது. இது தடிமனை ஏற்படுத்தும் வைரசின் ஒரு பிரிவானது என்றும், பறவைகளில் இது காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. எனினும் நேரடியாக மனிதனைத்தாக்காது என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும். ஆயினும் 1997ஆம் ஆண்டு ஹொங்ஹொங்கில் இந்த வைரஸ் தாக்கம் ஏற்பட்ட 18பேரில் 6பேர் பலியாகினர். இதன் விளைவாக இறைச்சிக்காக வளர்க்கப் பட்ட கோழிகள், வாத்துக்கள் என மில்லியன் கணக்கில் அழிக்கப்பட்டன. எனினும் இவ்வருடத்தில் வியட்னாமிலும், தாய்லாந்திலும் 44பேர் பாதிக் கப்பட்டு 32பேர் பலியானதாக அறிவிக் கப்பட்டது. அதன்படி 75வீதத்தினர் இறப்பைச் சந்திப்பது புலனாகின்றது. இதற்கு சிகிச்சை முறையும் கண்டறியப்படவில்லை.

இவ்வகை வைரஸ் தற்போது பூனை, பன்றிகளுக்கும் பரவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மனிதரிலும் தொற்றிவிடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்படாமையினால் மில்லியன் கணக்கான மக்கள் பாதிப்படைவர் என்ற அச்சம் தோன்றியுள்ளது. இந்த வைரஸ் முன்னரைவிட தற்போது நீண்டகாலம் நீடிக்கும் தன்மையைப் பெற்றிருப்பதாகவும், எதிர்காலத்தில் பலவிதமான விலங்குகளுக்கும் பரவலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தடிமன் அல்லது காய்ச்சலை ஏற்படுத்தும் வைரசுகள் 20 முதல் 30வருடகால இடைவெளியில் உலகம் எங்கும் பரவும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். 1918ஆம் ஆண்டில் ஸ்பெயின் காய்ச்சல் எனப்படும் தொற்று ஏற்பட்டு 20 மில்லியன் பேர் உயிரிழந்தனர். என்று கூறப்படுகிறது. அப்போது பரவிய வைரஸ் H5N1ஆகும்.

பின்னர் 1950ஆம் ஆண்டில் H2N2 வைரஸ் பரவியதாகவும் 1960இல் H5N1 வைரஸ் பரவியதாகவும் பலர் மாண்டதாகவும் இதனால் எதிர் காலத்திலும் இவ்வித அழிவுகளை மனித குலம் சந்திக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

எவ்வாறேனும் மேற்படி கருத்துக்களை மறுப்பவர்களும் இருக்கின்றனர். 1997இல் தொற்று ஏற்படுத்திய தாக்கம் அதன் பின் ஏற்படவில்லை என்றும் மனிதரில் தொற்று ஏற்பட்டதைக் காண முடியவில்லை என்றும் சிலர் கூறுகின்றனர். இதனால் இது தொடர்பாக கலவரப்படவில்லை என்றும் உலகில் மருந்துவப் பொருட்களின் பிரபல்யத்தினால் 1918ஆம் ஆண்டு மிகப் பெரிய அழிவு ஏற்படவில்லை என்றும் வாதாடுகின்றனர். எனினும் இவ்வாறான நிலை ஏற்படும் போது அதனைத் தடுக்கும் வழிவகைகள் கண்டுபிடிக்காததே. தற்போதைய வினாவாகும் எனினும் தற்போது புதிய கண்டுபிடிப்பாக கடந்த வாரம் நடத்தப்பட்ட ஆய்வின் போது பறவைக்காய்ச்சல் வைரசை இனங்காணக் கூடிய கருவி ஒன்றை ஹொங்ஹொங் அறிமுகப்படுத்தியுள்ளது. இதைக் குறைந்த செலவில் ஒருவார கால ஆய்வின்பின் கண்டுபிடித்துள்ளனர். இது சற்று ஆறுதல் அளித்தாலும் நோயை இனங்காண்பதன்றி தடுக்கும் முறையை கண்டுபிடிக்கும் காலம் எந்த நாளோ?

# புகைப்படமெடுக்கும் றோபோ




ஜப்பானிய நிறுவனம் ஒன்று புகைப்படம் எடுக்கும் இயந்திர மனிதனை (றோபோவை) தயாரித்து வெளியிட்டுள்ளது. உருவில் சிறியதாக இருப்பினும் வீட்டின் பாதுகாவலனாகவும் பணிபுரியக் கூடியது. இதில் பொருத்துப்பட்டுள்ள புகைப்படக் கருவி 180அடி தூரத்தைப் படம் எடுக்கக் கூடியதுடன் அதுபற்றிய தகவல்களை செல்லிட தொலைபேசி மூலம் அறிந்துகொள்ளலாம்.

வீட்டிலோ, அலுவலகங்களிலோ யாருமில்லாத வேளையிலும் இது இயங்கக் கூடியது. 2900 அமெரிக்க டொலர் பெறுமதியான இக்கருவி சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# உலகின் மிக உயரமான பாலம்

பிரான்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் தாண் நதி மீது மாசிப் மத்திய மலையில் மிலாப் நகரில் ஒருபாலம் கட்டப்பட்டுள்ளது. இதன் உயரம் 885 அடி, நீளம் 2கிலோ மீற்றர் இதைக் கட்டுவதற்கு 262கோடி ரூபாய் செலவானது. இந்த இரும்புப் பாலம் 36ஆயிரம் தொன் எடை உள்ளது. ஈபிள் கோபுரத்தைவிட 70அடி உயரமான இந்தப்பாலம், உலகிலேயே உயரமான பாலமாகக் கின்னஸ் சாதனைப் புத்தகம் இதை அறிவித்துள்ளது.


# பறவைகளுக்கு வழிகாட்டும் விமானம்



பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ப பறவைகளும் தங்கள் இருப்பிடத்தை மாற்றிக் கொள்கின்றன. அமெரிக்காவின் விஸ்கோன்சின் அருகேயுள்ள நிசிடா தேசிய பூங்காவில் இருந்து அபூர்வ நாரைகள் 1200 மைல்களுக்கு அப்பால் சகாஹோவிட்ஸ்கா பகுதிக்குச் சென்று விட்டன.

ஆனால் 6 குஞ்சுகள் மட்டும் வழி தெரியாமல் பழைய இடத்திலேயே தங்கி விட்டன. அந்தக் குஞ்சுப்பறவைகளை இடம்மாற்ற குட்டி விமானத்தைப் பறவைபோல வடிவமைத்துப் பறக்கவிட்டனர். அந்தக்குட்டி விமானத்தைப் பின்தொடர்ந்து அந்தக்குஞ்சுப் பறவைகள் புளோரிடா மாநிலம் கிறிஸ்டல் நதிக்கு மேலே பறந்துசெல்லும் காட்சி.

# பிரமிட் மருத்துவம்



மாற்று மருத்துவ முறைகளில் தற்போது பிரமிடின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது.

எகிப்து நாட்டில் கெய்ரோ நகருக்கு மேற்கே 16கி.மீ தொலைவில் 13ஏக்கர் பரப்பளவில் உள்ள 'கிரேட் பிரமிடின' வடிவமும் அளவீடுகளும் பிரமிடு மருத்துவத்திற்கு முன்னோடியாகக் கருதப்படுகிறது. உலகின் பல்வேறு நாடுகளில் அக்காலத்திலேயே பிரமிடுகள் கட்டப்பட்டன. தென்அமெரிக்கா, சைபீரியா, மெக்சிகோ, தென்னாபிரிக்கா, சீனா முதலிய நாடுகளில் பிரமிடுகள் இருந்தாலும் எகிப்து பிரமிடே, பிரமிடு மருத்துவத்திற்கு முன்மாதிரியாக வைக்கப்பட்டுள்ளது.

பிரமிடின் வெளிப்புற வடிவத்திற்கும் அதனுள் நடக்கும் இயற்பியல், வேதியியல், உயிரியல் மாற்றங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். அமெரிக்காவில் உள்ள நாசா விஞ்ஞானிகள் பிரமிடுகளின் சக்தி, சூரிய சக்தியைவிட அதிக அளவில் மாறுதல்களை ஏற்படுத்தவல்லவை என நிரூபித்துள்ளனர்.

பிரமிடில் உதவியால் பல்வலி, ஒற்றைத்தலைவலி, மூச்சுத்திணறல், வாதம் முதலிய நோய்கள் விரைவில் குணமடைகின்றன என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. பிரமிடுக்குள் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீருக்குள் காஸ்மிக் கதிர்கள் ஊடுருவிச் செல்வதால் தண்ணீர் சக்தி பெற்றுவிடுகின்றது. டென்னிதேல் என்ற ஆய்வாளர் பிரமிடினுள் வைத்த நீரில் உள்ள ஒட்சிசனின் அளவு அப்படியே இருப்பதாகவும் ஐதரசன் வாயுவின் அளவு மட்டும் குறைவதாகக் கண்டார்.

# இலத்திரனியல் புத்தகம்




இங்கு காணப்படுவது ஜப்பான் தயாரித்து வெளியிட்டுள்ள இலத்திரனியல் புத்தகமாகும். இதுவரை நாம் ஏடுகளில் எழுதியும் படங்களை வரைந்தும் பயன்படுத்தி வருகிறோம். இதனை மாற்றியமைக்கும் முயற்சியாக இந்த இலத்திரனியல் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது இரண்டு சிறிய மின் கலங்களின் உதவியுடன் இயக்கப்படும். இதில் விசேட அம்சமானது எமக்குத் தேவையானவற்றை எழுதவும் படங்களை வரைந்து கொள்ளவும் முடியும். இக்கருவி 1வகையான ஒலிகளைக் கொண்டுள்ளது. தேவையான ஒலியைப் பெறமுடியும்.

# வாய்த் துர்நாற்றத்தைத்தடுக்கும் லேசர் கதிர் சிகிச்சை

பல் வகையான பற்பசைகளைப் பாவித்தும் மருந்துகளை உபயோகித்தும் கட்டுப்படுத்த முடியாத சிலரின் வாய்துர்நாற்றத்தை



லேசர்கதிர் மூலம் தவிர்க்க முடியும் என ஸ்ரேலிய வைத்திய அதிகாரியான யுகுடா பின்கெஸ்டின் நிரூபித்துள்ளார். இதனை ஏற்படுத்தும் பக்றீறியாக்களை இந்த லேசர்கதிர் ஊடுருவியழிக்கும் வல்லமை பெற்றுள்ளதால் தொண்டை மற்றும் பல் ஈறுகளிலும் உள்ள பக்றீறியாக்கள் இதன் மூலம் அழிந்து விடும். இது அறிமுகமான பின் இதனால் பாதிப்புறுவோரின் தொகை 6 வீதமாக குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இயங்கும் முற்றிலும் கணினி மயப்படுத்தப்படும் செய்மதி இது. இதனை கலிபோர்னிய விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். வெகுவிரைவில் இதனை செவ்வாய்க் கிரகத்தை நோக்கி அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# எயிட்ஸ் நோயிலிருந்து எம்மையும் எமது பிரதேசத்தையும் பாதுகாப்போம்

இன்றைய அறிவியல் உலகிற்கு பெரும் சவாலாகவும் உலக மக்களை அச்சுறுத்தும் மிகப்பெரிய ஆட்கொல்லி நோயாகவும் எயிட்ஸ் விளங்குகின்றது. 1981ஆம் ஆண்டு அமெரிக்காவில் முதலாவது எயிட்ஸ் நோயாளி இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து ஏறக்குறைய இரு தசாப்தங்களுக்கு மேலாகியும் இந்நோய்க்குரிய மருந்து கண்டு பிடிக்கப்படாமையால் இந்நோய் வேகமாகப் பரவி வருகின்றது.

சிந்தித்துப் பார்க்க வேண்டும். எமக்குத் தெரிந்த எல்லாம் 'எயிட்ஸ்' குணப்படுத்த முடியாத ஒருநோய். இது HIV கிருமியால் பரவுவது என்பது மட்டுமே. இதற்கு மேலாக இந்நோய் எவ்விதம் பரவுகின்றது என்றால்,

1.பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகள் மூலம்

2.எயிட்ஸ் வைரஸ் தொற்

சரியான காரணங்களைக் கண்டறிந்து அவற்றில் இருந்து விடுபடுவதன் மூலமே இந்நோயிலிருந்து நாமும் எமது பிரதேசமும் பாதுகாக்கப்படலாம்.

சுற்றுலாத்துறைக்கும் பாலியல் தொடர்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு. யுத்தத்தினால் அல்லலுற்ற எமது மக்களுக்கு யுத்த இடைவேளையில் கிடைத்த சமாதான ஓய்வைப் பயன்படுத்தி உல்லாசப்

தீவிரப்படுத்தப்பட வேண்டும் எயிட்ஸ் இரு கொடிய முகங்களையுடையது.

01) எயிட்ஸ் வைரஸ் ஆளைக் கொல்வது.

02) எயிட்ஸ் நோயுள்ளவரைஇகழ்ந்து சமுதாயம் கொல்வது. இந்நிலையிலிருந்து இந்நோயாளிகளை மீட்க,இவ் வருட எயிட்ஸ் எண்ணக்கரு "எயிட்ஸ் நோயாளர் எமது நண்பர்கள்" என்ன

களையே பயன்படுத்துவது சிறந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக சமூகத்திற்கு செய்தியை தெரிவிக்கும் சிறந்ததொரு ஊடகம் பாடசாலை, பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை முன்வைக்க வேண்டும். பாலியல் எயிட்ஸ் கல்வித்திட்டத்தில் வெற்றி கண்ட

இந்நிலையில் இந்நோய் ஏற்படாதவாறு கட்டுப்படுத்தும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளே மரணத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் அரும்பெரும் மருந்தாகும்.

Aequired Immune Dejiciency Syndrom என்ற ஆங்கிலப் பதங்களின் சுருக்கமே AIDS. அதாவது தமிழில் "ஈட்டிய நோய்த் தடைக் காப்பு குறைபாட்டு நோய்" என அழைக்கப்படுகின்றது. இந்நோயைப் பரப்பும் வைரஸ் கிருமியை Human Immune dejiciency Virus என்ற ஆங்கிலப் பதத்தின் சுருக்கமே HIV என்றும், தமிழில் "மனித நோய்த்தடை காப்புக்குறை பாட்டுக் கிருமி" என்றும் அழைக்கப்படுகின்றது.

றுள்ள ஒருவரது குருதியை இன்னொருவருக்குஏற்றுவதன் மூலம்.

3. தொற்றுள்ள ஊசிகள், முகச்சவர உபகரணங்கள் மூலம்.

4. எயிட்ஸ் நோயுடைய தாயிலிருந்து

*.தொப்புள்கொடி மூலம் குழந்தைக்கு.

*. தாய்ப்பாலை குழந்தை அருந்தும் போது போன்ற காரணிகளால் பரவுகின்றது.

எயிட்ஸ் நோயானது ஒரு தொற்றுநோய் என்ற தவறான விளக்கமும் நம் மத்தியில் உண்டு. அதாவது,

*. ஒருவரை (நோயுடைய

பிரயாணிகளும், வெளிநாட்டு உறவுகளும் எனப் பலர் இங்கு தினசரி வரும் நிலையில், எதிர்காலத்தில் எமது இளம் சந்ததியினரையும்

சிறு பராயத்தினரையும் இந் நோய் தாக்கி விடுமோ என்ற அச்சம் இன்று மேலோங்கியுள்ளது.அதற்கான வாய்ப்பில்லையென்று கூறுவதற்குமில்லை.

இந் நிலையில் நோய்க்கான தடுப்பு மருந்து இல்லாத விடத்து விழிப்புணர்வு கருத்தூட்டல்கள் மூலமே இக் கொடிய மரணத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க முடியும் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சரி, வளர்முக நாடுகளிலும்சரி பாலியல் தொடர்பான பல பாதுகாப்பு நடவ




நாடாக உகண்டா குறிப்பிடப்படுகின்றது. அந்தளவிற்கு எமது பிரதேசத்தையும் கொண்டு வர வேண்டும்.

எயிட்ஸ் நோயுடைய ஒருவர் தனக்கு நோயுள்ளதென்பதை ஏற்று

தான் நாங்கள் கூறினாலும் சமூகப் பார்வை மாற்ற முடியாத ஒன்று என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.பாலியல் தான் முழுக்காரணம் என்று முற்றாகவும் கூறிவிடமுடியாது ஏது மறியாப் பிஞ்சுகளும் இந் நோய்க்கு ஆளாவது மனங்கொள்ளத்தக்கது.

**உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு கிளி/பிரதி சுகாதாரப் பணிமனை நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ் எழுதிய கட்டுரை**

பொதுவாக நகர்ப்புறம் சார்ந்த மக்கள் கிராம மக்களைவிட ஒப்பீட்டளவில் கல்வியறிவு கூடியவர்களாகவும் நாகரிக வாழ்க்கையுடையவர்களாகவும், பொருளாதார நலச்சேவைகளை அதிகளவு நுகர்பவர்களாகவும் இருக்கும் அவர்களே கூடியளவு இந் நோய்க்கு ஆளாகின்றார்கள் என்றால், கிராம மக்களிடையே இந்நோய் பரவினால் எத்தகைய தாக்கத்தை உண்டு பண்ணும் என்பதைச

வரை) கட்டியணைத்தல்.

*. முத்தமிடுதல், கைகுலுக்குதல்

*. நோயாளரது உடைகள், உணவுப்பாத்திரங்களைப் பயன்படுத்துதல்.

*. இருமல், தும்மல் ஒன்றாகச் சேர்ந்திருத்தல். இவற்றினால் ஒருபோதும் எயிட்ஸ் பரவமாட்டாது.

இந்நிலையில் நோய் பரவும்

டிக்கைகள்,குறித்த கருத்தூட்டல்களை பெற்றோர், பாடசாலைகள் சமூக,சமய நிறுவனங்களூடாக மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகையதொரு தேவையே எமது பிரதேசத்தையும் இந் நோயிலிருந்து மீட்டெடுக்கும்.

இலங்கையில் ஏறக்குறைய 596 எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். எமது மாவட்டத்திலும்ஒருவர் இனங்காணப்பட்டிருப்பதால் எயிட்ஸ் பாதுகாப்பு

எனவே இத்தகையதொரு சூழ் நிலையில் மக்களைச் சென்றடையக் கூடிய வகையில் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வுகளை பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சி துண்டுப்பிரசுரங்கள், கலை நிகழ்வுகள், வீதி நாடகங்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் மக்கள் கூடுதலாகப் பயன்படுத்தும் ஊடகங்

பிறருக்கு கருத்துச் சொல்லும் தைரியமுடையவராக வேண்டும். இதன் மூலம் இந் நோயின் தாக்கத்தைப் பிறர் புரிந்து, அதிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக சமூகசேவையென்பது மக்கள் புரிந்து கொள்ளும் போது தான் வெற்றியளிக்கும் அதையுணர்ந்து செயற்படுவதினூடாக எம்மையும்எமது பிரதேசத்தையும் எயிட்ஸிலிருந்து பாதுகாப்போம்.

# சாருகானின் கலை நிகழ்ச்சியில் வன்முறை ஹெல உறுமய தலைவர்களே பொறுப்பு

## ஹெல உறுமய முக்கியஸ்தர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பில் குதிரைப்பந்தயத்திடலில் சாருகானின் கலை நிகழ்ச்சியின் போது நடந்த ஆர்ப்பாட்டங்களுக்கும், குண்டு வீச்சிற்கும் ஜாதிக ஹெலஉறு மயவே காரணம் என்று கூறி அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான வண.அபரகே பன்னா னந்த தேரர் கட்சியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த இசை நிகழ்ச்சிக் கெதிராக இளைஞர்களைத் திரட்டி இசை நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு ஊர்வலமாக நடத்திச் சென்று ஆர்ப்பாட்டம் செய்யுமாறு தூண்டியவர்களும் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த குருமாரே என குற்றம் சாட்டியுள்ள அவர், ஜாதிக ஹெல உறுமய தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான வண அத்துரலிய ரத்னதேரர், வணஓமல்பே சோபிததேரர் ஆகிய இருவரும் அங்கு நடந்த வன்செயல்களுக்கும் பின்னர் இடம் பெற்ற குண்டு வீச்சிற்கும் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# கோதுமைமாவை இறக்குமதி செய்து தட்டுப்பாட்டை நீக்க அரசு முடிவு

(கொழும்பு)

தற்பொழுது நாட்டில்ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை நீக்குவதற்கு மா இறக்குமதியை அரசாங்கம் மேற்கொள்ளப்போவதாக வணிக வாணிபத்துறை அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே அறிவித்துள்ளார்.இது சம்பந்தமாக முழுவிபரங்களையும் கெமினட் அமைச்சர் குழுவிற்குச் சமர்ப்பித்துள்ளனர் என்றும், தற்பொழுது ஏற்பட்டுள்ள மாத்தட்டுப்பாட்டை வேண்டுமென்றே பிரிமா நிறுவனம் மேற்கொண்டு வருவதாக அமைச்சர் அறிவித்துள்ளார்.அரசு பிரிமா நிறுவனத்திற்கு அலகுக்காக வழங்கிய மானியம் 7.50 சதம் ஏப்பிரல்மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளதால் பிரிமா நிறுவனம் மாத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

# ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னைய பாதுகாப்பு அமைச்சருமான திலக் மாரப்பனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின செயற்குழு தீர்மானித்துள்ளது. கடந்த சில தினங்களாக திலக் மாரப்பன வெளியிடும் அறிகைகள் கட்சியின் சட்டங்களை மீறிப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெ வித்துள்ளார்.

# திருமலையில் கடும் வெள்ளம் மூதூர்-திருமலை தொடர்பு துண்டிப்பு

(வவுனியா செய்தியாளர்)

கடந்த சிலநாட்களாக பெய்து வரும் கடும் மழையினால் திருகோணமலையில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் மூதூர்- திருமலைத் தொடர்பு துண்டிக் கப்பட்டுள்ளது.

திருகோணமலையின் திரியாய், குச்சவெளி, செந்தூர், கும்புறுப்பிட்டி, புடவைக்கட்டு ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ளமக்களில் திரியாய் பாடசாலையில் 367 குடும்பங்களும், கும்புறுப்பிட்டி பாடசாலையில் 400 குடும்பங்களும் தங்கியுள்ளன. இவர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா சென்று பார்வையிட்டு உடனடி உதவிகளுக்கு ஏற்பாடுகள் செய்துள்ளார்.

இதேவேளை நேற்று முன் தினம் பெய்த கடும்மழையினால் திருமலை- நிலாவெளி வீதியில் 3அடி நீர் பாய்கிறது. மூதூர்- கட்டைபறிச்சான் வீதியில் கட்டைப் பறிச்சான் பாலம் அரிப்பிற்குள்ளாகி உள்ளதால் மூதூர் கட்டைபறிச்சான் வீதியில் கட்டைபறிச்சான் ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. அத்துடன் கிண்ணியா பாலமும் உடைந்துள்ளது. மேலும் அன்னகந்தளாய் வீதியில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளத்தினால் மூதூர்-திருமலை துண்டிக் கப்பட்டுள்ளது. (10)

# நூல்கள் அன்பளிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு வலயப் பாடசாலை நூலகங்களுக்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் ஊடாக இந்நூல்கள் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் இந் நூல்களை பாடசாலை அதிபர்களிடம் கையளித்தனர்.

இந் நூல்களில் கல்விசார் நூல்கள், இலக்கியங்கள், சிறுகதைகள், நாவல்கள், சிறுவர் இலக்கியங்கள் என நூற்றுக் கணக்கானவை அடங்கும். (10)

# ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்குள் புகமுயன்ற இரு ஆயுத தாரிகள் பொலிசாரால் கைது

(அம்பாறை)

அம்பாறை - கிங்குறானயில் கடந்த புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஈ.பி.டி.பி. அலுவலகத்தினுள் புக முயன்ற இரு ஆயுத தாரிகள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ் வாயுத தாரிகள் பொலிசாரை நோக்கிச் சுட்டதாகவும் எனினும் காயம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. கைதானவரில் ஒருவர் ஸ்[illegible] மொகமட் மயீத் என்பவர் என[illegible] தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை டமனப்பொலிசார் மேற்கொள்கின்றனர்.

# யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து, மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அறிவிப்பு

**மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட மீளக்குடியமர்தல் கொடுப்பனவாக ரூ.25000/= முழுமையாக வழங்கப்படாமையை ஆட்சேபித்து கடந்த இருவாரமாகச் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சில குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் யாழ். செயலகத்தின் முன் மறியல் போராட்டம் நடாத்திச் செயலக அன்றாடக் கருமங்களைச் செயற்படாமல் தடுத்தமை தொடர்பாக பொதுமக்களுக்கும், இவ்வாறு மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கும் பின்வரும் செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.**

22.02.2002 இல் அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மீளக்குடியமர்ந்த, மாதாந்த வருமானம் ரூ 2500 இற்குக் குறைந்த குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் கொடுப்பனவாக ரூபா 25000 அவர்களுடைய வங்கிக் கணக்கு மூலம் கொடுப்பனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக்கொடுப்பனவுக்கான நிதி அரசாங்கத்தினுடைய நிதி அல்ல. வெளிநாடுகளின் உதவியுடன் பெறப்படும் நிதியாகும். முக்கியமாக உலக வங்கி இதற்கான நிதியை வழங்குவதற்குச் சம்மதித்திருந்தது. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 50000 குடும்பங்கள் கடந்த மாதம்வரையில் மீளக் குடியமர்ந்திருக்கின்றார்கள். இவர்களில் 42,000 குடும்பங்களுக்கு இம் மீளக்குடியமர்தலுக்கான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென எம்மால் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 32,821 குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கான நிதி பெறுவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்பட்டன. இவற்றில் இதுவரை 28,942 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு எம்மால் செலவிடப்பட்ட நிதி ரூபா 698 மில்லியனாகும். இந்த நிதி யாழ். மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்தக் குடும்பங்கள் மூலம் முதலிடப்பட்டுள்ளது.இதனைவிட ஏறக்குறைய 6000 குடும்பங்களுக்குரிய கொடுப்பனவுகளுக்கான கையொப்பங்கள் பெறப்பட்டு இதற்கான நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் கையொப்பம் பெறப்பட்ட காலவரிசைக்கேற்ப இந்தக் கொடுப்பனவு செய்வதற்கு இச்செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதற்கான நிதி வருவதில் சில காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. எனினும் கடந்தவாரம் வடக்கு-கிழக்கு மாகாணசபையிலும், நிவாரண, புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சினாலும் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் இந்த 7000 குடும்பங்களின் நிலைபற்றி என்னால் எடுத்துரைக்கப்பட்டு, இந்த 7000 குடும்பங்களுக்கும் இவ்வருட முடிவிற்குள் கொடுப்பனவு செய்வதற்கான நிதியை வழங்குவதற்கு கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான முன் நடவடிக்கைகள்எடுக்கப்பட்டுவருகின்றன. இதன் முதற்கட்டமாக 50 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. இதனைக்கால ஒழுங்கின் அடிப்படையில் 2000 குடும்பங்களிற்கு இவ்வாரத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மீதிக் குடும்பங்களிற்கான கொடுப்பனவுகள் தற்போதுள்ள நிலையில் இவ்வருடத்திற்குள்ளேயே வழங்குவதற்கான முழு முயற்சிகளும் இந்தச் செயலகத்தினால் செய்யப்பட்டு வடக்கு- கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தினாலும், நிவாரண,புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் உத்தியோகத்தர்களினாலும் செய்யப்பட்டுவருகின்றன. இந்த நிலையில் செயலகத்தின் முன்மறியல் போராட்டம் நடத்து வதினால் இக்கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்தும் என நான் நினைக்கவில்லை. அவ்வாறு மறியல் போராட்டம் செய்வதற்கு முன்வருபவர்கள் முன்னுரிமை ஒழுங்கின் நடைமுறையிலிருந்து நீக்கப்படுவார்கள். யுத்தத்தினாலும், வெள்ளத்தினாலும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய புனர்வாழ்வு, நிவாரண அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளை வருட இறுதியில் செய்துவரும் இந்தச்செயலகத்தை முடக்குவதன் மூலம் இந்தக் கொடுப்பனவுக்கான காலதாமதம் கூடிக்கொண்டு செல்லுமே தவிர வேறு வகையில் முன்னேற்றம் ஏற்படும் என நான் நினைக்கவில்லை. எனவே பாதிக்கப்பட்ட மக்கள் பொறுமையைக் கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இதுவரை கொடுப்பனவு செய்யப்பட்ட முழு விபரமும் கீழே தரப்பட்டுள்ளது.

## 2004 நவம்பர் மாதம் வரை

| | பிரதேசசெயலர்/ உ.அ.அதிபர்பிரிவு | இதுவரைமீளக் குடியமர்ந்தவர் களது மொத்த எணணிக்கை | நேர்காணல் முடிந்த குடும்பங்கள் | குடும்பப்பதிவு அட்டைவழங் கப்பட்டவர்கள் | தகுதியான வர்களின் எண்ணிக்கை | இதுவரை கொடுப்பனவு வழங்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | வழங்கப் பட்டதொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | நெடுந்தீவு | 134 | 96 | 96 | 96 | 38 | 95000 |
| 02 | வேலணை | 1,965 | 1,873 | 1,632 | 1,632 | 1,116 | 26,97000 |
| 03 | ஊர்காவற்றுறை | 1,547 | 1,444 | 822 | 822 | 799 | 19,54000 |
| 04 | காரைநகர் | 1,351 | 1,316 | 1,232 | 1,325 | 993 | 24,82500 |
| 05 | யாழ்ப்பாணம் | 3,314 | 3,102 | 2,328 | 2,379 | 1,084 | 24,28000 |
| 06 | நல்லூர் | 3,368 | 3,122 | 2,533 | 2,533 | 1,228 | 29,45500 |
| 07 | சண்டிலிப்பாய் | 3,157 | 2,944 | 2,435 | 2,881 | 1,986 | 49,65000 |
| 08 | சங்கானை | 2,153 | 1,995 | 1,729 | 1,826 | 1,382 | 33,63500 |
| 09 | உடுவில் | 2,320 | 2,188 | 1,764 | 1,764 | 1,026 | 25,01500 |
| 10 | தெல்லிப்பளை | 1,417 | 1,351 | 870 | 1,068 | 853 | 21,32500 |
| 11 | கோப்பாய் | 2,901 | 2,686 | 2,405 | 2,673 | 2,230 | 55,21500 |
| 12 | தென்மராட்சி | 19,315 | 17,905 | 16,833 | 16,406 | 12,453 | 299,80500 |
| 13 | கரவெட்டி | 852 | 817 | 726 | 726 | 535 | 12,52000 |
| 14 | பருத்தித்துறை | 2,964 | 2,859 | 2,741 | 2,741 | 1,289 | 30,36000 |
| 15 | மருதங்கேணி | 3,491 | 3,482 | 3,265 | 3,265 | 1,930 | 44,45500 |
| | மொத்தம் | 50,249 | 47,180 | 41,411 | 42,137 | 28,942 | 698,00000 |

**செ. பத்மநாதன்,**
*அரசாங்க அதிபர்,*
*யாழ்.மாவட்டம்.*

(சி10977)

# கேள்வி அறிவித்தல்

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்க்காட்டப் படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்குத் தேவையான கோதுமை மாவினை (பிறிமா கிறீன் பிராண்ட்) வழங்கக் கூடிய இம்மாவட்டத் தில் பதிவு செய்யப் பட்ட ப.நோ.கூ. சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.**

| விநியோகிக்கப்படவேண்டிய காலம் | விநியோகிக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|
| சனவரி-2005 | 240மெ.தொன் |
| பெப்ரவரி-2005 | 240 மெ.தொன் |
| மார்ச்-2005 | 240 மெ.தொன் |

**இதற்கான கேள்விப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் இச் செயலகத்தில்08 2005.01.08 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.**

திருமதி.இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.10530)

# 05 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



# கப்டன் வாதவூரான்/வினோத்

**(முத்துலிங்கம் மனோகரன்)**

**நல்லூர் சாமிபுலம் பூநகரி**

**பிறப்பு 1979 - 03 - 13 வீரமரணம் 1999 - 12 - 18**

மாண்பற்ற இவ்வுலகில்
வீரப்புலியாக உருவெடுத்தாய்,
மண் மானம் காக்கவென
வரிப்புலியாகி தமிழ்த் தாயின்
மண்ணை முத்தமிட்டாய்
மறுபிறவியிலும் நீ எம்மில் உருவெடுப்பாய்.

*தகவல்:–*

**மு.மனோறஞ்சிதம்,**
**வாகனப்போக்கு வரத்துப்பரிவு,**
**காவல்துறை,**
**கிளிநொச்சி.**

(5341)

## அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிய பேருந்துச் சாரதிக்கு காவல்துறை எச்சரிக்கை

பயணிகள் பேருந்து தடுத்து நிறுத்தப்பட்டு காவல் துறையினரால் எச்சரிக்கை செய்து விடப்பட்டது.நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; கிளிநொச்சியில் இருந்து புளியங்குளம் நோக்கிச் சென்ற பயணிகள் பேருந்து அதிக எண்ணிக்கையான பயணிகளை ஏற்றியதுடன் மிதிபலகையிலும் பயணிகள் நின்றதை அவதானித்த தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் 155ஆம் கட்டையில் வைத்து பேருந்தைத் தடுத்து சாரதிக்கு எச்சரிக்கை விடுத்து செல்லவிட்டனர். (05)

## கால்நடைகளைக் கட்டுப்படுத்த வேண்டுகோள்

கிளிநொச்சியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் கால்நடைகளை வளர்க்கும் உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

அண்மைக்காலங்களாக கட்டாக்காலியாக வீதிகளில் திரியும் கால்நடைகளினால் வீதி விபத்துக்கள் ஏ-9 நெடுஞ்சாலையில் நடைபெற்றுள்ளன. இவ்விபத்துக்களின்போது பலர் படுகாயமடைந்தும், சொத்துக்களிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் கட்டாக்காலியாக வீதிகளில் திரியும் கால்நடைகளை உரியவர்கள் உடன் பிடித்துக் கட்டி வளர்க்குமாறும், இதனால், ஏற்படுகின்ற விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவுப்பொறுப்பாளர் கேட்டுள்ளார்.(கு,ச)

# கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்க்காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்குத் தேவையான புழுங்கல்(சிவப்பு நாடு) அரிசியினை வழங்கக்கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | விநியோகிக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|
| சனவரி- 2005 | 330 மெற்றிக்தொன் |
| பெப்ரவரி-2005 | 330 மெற்றிக்தொன் |
| மார்ச்- 2005 | 330 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப்படிவங்களையும்,மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2005.01.08 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி.இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.10531)

## முல்லை நுண்கலைக் கல்லூரியின் மார்கழி மாத "தமிழிசை அரங்கு"

இடம்- புது/நுண்கலை அரங்கு
புதுக்குடியிருப்பு.[பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக, புதுக்குடியிருப்பு]

காலம்- 19.12.2004 ஞாயிறு மாலை 4.30 மணி

சிறப்பு விருந்தினர்
திரு.கலைக்கோன் அவர்கள்
(பணிப்பாளர்-நவம் அறிவுக்கூடம்)

நிகழ்வுகள்

4.30- இளையோர் தமிழிசை அரங்கு,
பாட்டு :- நுண்கலை வாய்ப்பாட்டுப் பிரிவு மாணவிகள்.
வயலின் :- கலாவித்தகர் செல்வி க. றஞ்சனா.
மிருதங்கம் :- வித்துவான் திரு.சுரேந்திரன்
முகர்சிங் :- செல்வன் கோமகன்

5.00- பாட்டு :- கலாவித்தகர் திரு.சத்திய மோகன்.
வயலின் :- கலாவித்தகர் செல்வி க. றஞ்சனா.
மிருதங்கம் :- கலாவித்தகர் திரு.ந.சதீஸ்குமார்.

5.45- நுண்கலைப் பரீட்சையில் அதிவிசேட சித்திபெற்ற நுண்கலை மாணவர்களுக்கான கௌரவிப்பும், சிறப்பு விருந்தினர் உரையும்.

6.00- சிறப்பு வாத்தியத் தமிழிசை அரங்கு,
ஹார்மோனியம் :- வித்துவான் திரு.ஜோன் கபாஸ்.
வயலின் :- இசைஞான சுரபி திரு.அ.ஜெயராமன்.
மிருதங்கம் :- வித்துவான் சதா-வேல்மாறன்.
முகர்சிங் :- கலாவித்தகர் திரு.ந.சதீஸ்குமார்.
தபேலா :- கலாவித்தகர் திரு.சிவராமன்.

கலைவிருந்தருந்த அனைவரையும் அழைக்கின்றோம்

-தமிழீழ நுண்கலைக் கல்லூரியினர்-

(சி.10956)

## முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் உலருணவுப் பொருட்கள் வவுனியாவிலிருந்து பாரவூர்திகள் மூலமாகக் கொண்டு வருவதற்கான கூறுவிலை கோருதல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு 2005 சனவரி தொடக்கம் 2005 டிசம்பர் மாதம்வரை சீனி,பருப்பு,மாவு, அரிசி ஆகியவற்றை வவுனியாவிலிருந்து கொண்டுவந்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ப.நோ.கூ.சங்கங்களிலும் முல்லைத்தீவிலுள்ள அரச களஞ்சியத்திலும் ஒப்படைப்பதற்காக வன்னி

## விநியோகிக்கப்படவேண்டிய இடங்களும் அவற்றிற்கான தூரங்களும்

| | | | |
|---|---|---|---|
| 01. கரைதுறைப்பற்று ப.நோ. கூ. சங்கம் | | முள்ளியவளை | 89 கி.மீ |
| 02. புதுக்குடியிருப்பு | " | புதுக்குடியிருப்பு | 112 கி.மீ |
| 03. விசுவமடு | " | விசுவமடு | 101 கி.மீ |
| 04. முத்துஐயன்கட்டு | " | ஒட்டுசுட்டான் | 72 கி.மீ |
| 05. வவுனியா வடக்கு | " | காிப்பட்ட முறிப்பு | 57 கி.மீ |
| 06. பனங்காமம்பற்று | " | வவுனிக்குளம் | 67 கி.மீ |
| 07. துணுக்காய்ப்பகுதி | " | துணுக்காய் | 71 கி.மீ |
| 08. முல்லைத்தீவு அரச களஞ்சியம் | " | முல்லைத்தீவு | 96 கி.மீ |

(01) முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புனர்வாழ்வு,புனரமைப்பு செயலகத்தில் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/-ஐசெலுத்தி 2004.12.20 ஆம் திகதி தொடக்கம் 2004.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் கூறுவிலைப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(02) **வரையறைகள்**

அ. தொடரணி உத்தியோகத்தர் கேட்கும்போது தேவையான பாரவூர்திகள் விடுவிக்கப்பட வேண்டும்.
ஆ ஒரு லோட்டிற்கு (10,000கி.கிராம்) இருபத்தைந்து (25 கி.கி) கிலோக்கிராமிற்கு மேலதிகமாகச் சோர்வு ஏற்படுமிடத்து அச்சோர்வுக்கான பெறுமதி அந்தப் பாரவூர்திக்கான கூலியிலிருந்து அறவிடப்படும்.
இ. பாதுகாப்பான முறையில் குறிப்பிடப்பட்ட இடங்களில் பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.
ஈ பொருட்கள் ஒப்படைக்கப்பட்டமைக்கான உறுதிப்பத்திரம் கூலி பெற்றுக்கொள்ளும்போது சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(03) **கொடுப்பனவுகள**

காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்படும்.

(04)
என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/பதிவுத்தபால் மூலமாகவோ முல்லைத்தீவு செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலை கோரல் பெட்டியில் 2005.01.10 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம், கூறுவிலைக்காரர் அல்லது அவரது எழுத்து மூலமாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

திருமதி.இமெல்டா சுகுமார்,
கேள்விச்சபைத் தலைவர்/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.10532)

# சிட்டகாங்கில் வெற்றி பெறுவோம்

## கங்குலி நம்பிக்கை



சிட்டாகாங்கில் மீண்டும் ஒரு பிரமாண்ட வெற்றிக்காகக் காத்திருக்கி றோம் என இந்திய கிரிக்கெட் அணி யின் தலைவர் சவுரவ் கங்குலி நம் பிக்கை தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அணியுடன் நேற்று ஆரம்பமான இரண்டாவதும் இறுதியு மான டெஸ்ட்போட்டி நேற்று ஆரம்ப மானது. போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே கங்குலி மேற்கண்டவாறு தெரிவித்தார். தாகா டெஸ்ட் போட்டியில் இனிங்ஸ் மற்றும் 146 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி பெற்றிருந்தது தெரிந்ததே.

# அவுஸ்.-பாக். டெஸ்ட் போட்டி

## நெருக்கடி நிலையில் பாக். அணி




(பேர்த்)

அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முத லாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் நெருக்கடியான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

நேற்றுக் காலை 8 விக்கெட் இழப்பிற்கு 357 என்னும் நிலை யில் ஆட்டத்தை தொடங்கிய அவுஸ்திரேலியா 381 ஓட்டங் களுக்குச் சகல விக் கெட்டுக்களையும் இழந்தது. லாங்கர் 191 ஓட்டங்களுக்கு ஆட் டம் இழந்தார். அக்தர் ஐந்து விக் கெட்டுக்களையும், சமி மூன்று விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய பாக். அணி ஆரம்பத்தில் சற்று திறம்பட ஆட்டத்தை ஆரம் பித்தபோதிலும், 32 ஓட்டங்களுக்கு தனது முதலாவது விக்கெட்டை இழந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட பெரும் சரிவினால் 110 ஓட்டங்களில் எட்டு விக்கெட்டுக் களை இழக்க வேண்டியதா கியது. பின்னர் அக்தரும், சமியும் சற்று ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தி அணியின் ஓட்ட எண் ணிக்கை 179 வரை உயர உதவினர். கஸ்பரோவிச் 5 விக் கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டு ஓட்டங்களினால் பலவோனைத் தடுக்க முடி யாத நிலை ஏற்பட்டபோதும், அவுஸ். மீண் டும் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தது. மூன்று ஓவர் வீசிய நிலையில் 15 ஓட்டங்களை அவுஸ். அணி பெற்ற நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் முடி வுக்கு வந்தது.




அவுஸ். முதல் இன்னிங்ஸ் 381,
பாக். முதல் இன்னிங்ஸ் - 179,
அவுஸ். முதல் இன்னிங்ஸ் -15/0

விளையாட்டு

# இந்திய — பங்களாதேஷ் டெஸ்ட்

## இந்தியா சிறப்பான துடுப்பாட்டம்!



(சிட்டகாங்)

இந்திய- பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று சிட்டகாங்கில் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் கங்குலி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

இவ் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி மாற்றம் எதுவும் செய்யப்படாதபோதும், பங்களாதேஷ் அணியில் மூவர் மாற்றம் செய்யப்பட்டனர்.

முதலில் துடுப்பாடத் தொடங்கிய இந்தியா தனது முதலாவது விக்கெட்டை ஓட்டங்கள் 14ஆக இருந்த போது இழந்தது. சேவாக் 10 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்தார்.

அதன் பின்னர் கம்பீருடன் இணைந்த ராவிட் இருவரும் இணைந்து 273 வரை ஓட்ட எண்ணிக் கையை உயர்த்தினர். கம்பீர் 139 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து ராவிட்டுடன் சச்சின் டெண்டுல்கர் இணைந்தார்.

ஆட்டநேர முடிவின்போது இந்தியா 334/2 என்ற நிலையில் இருந்தது. ராவிட், சச்சின் முறையே 145, 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

# இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி

## மும்பையில் அவுஸ்.சை. வென்றது

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 3 ஆவது பெண்கள் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய பெண்கள் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.


இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் இடையே 7 ஒருநாள் போட்டி தொடரில் முதல் இரண்டு ஆட்டங்களில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இந்தியா-அவுஸ்திரேலிய பெண்கள் அணிகள் இடையேயான 3 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி மும்பையில் நேற்று நடந்தது.

முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி 47.1 ஓவர்களில் 147 ஓட்டங்களுக்கு அனைத்து விக் கெட்டுகளையும் இழந்தது. கிளார்க் 32 ஓட்டங் களும்,ரோல்டன் 40 ஓட்டங்களும், கெயிட்லே 56 ஓட்டங்களும் எடுத்தனர். இந்திய அணி தரப்பில் நீது டேவிட் 3 விக்கெட்டும், ஜிலேன் கோசாமி2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

பின்னர் ஆடிய இந்திய அணி 44 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 151 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மிஜ தாலி ராஜ் ஆட்டம் இழக்காமல் 62 ஓட்டம் எடுத்தார். ஜெயா சர்மா 47 ஓட்டங்கள் சேர்த்தார். இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் இடையேயான 4 ஆவது ஒருநாள் போட்டி குஜராத்தில் உள்ள வாபியில் வருகிற 19 ஆம் திகதி நடக்கிறது.

# தென்னாபிரிக்கா-இங். டெஸ்ட்

## தென்னாபிரிக்கா 273/7



தென்னாபிரிக்கா இங்கிலாந்து அணி களுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று போர்ட் எலிசபேத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி துடுப்பாட முடிவுசெய்தது.

இதன் பிரகாரம் களமிறங்கிய தென்னா பிரிக்க அணியின் முதலாவது விக்கெட் முதலாவது ஓவரின் இரண்டாவது பந்தி லேயே வீழ்ந்தது. சிமித் ஓட்டம் எதுவும் இன்றி ஆட்டம் இழந்தார். ஆயினும் அதன் பின்னர் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாக ஆடியபோதும் கலிசும், ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டம் இழந்தார். ருடோல்வ் 93 ஓட்டங்களையும், டிப்பென்னர் 79 ஓட்டங்களையும் பெற்று ஆட்டநேர முடிவின்போது அவர் ஏழு விக்கெட் இழப்பிற்கு 273 என்ற இலக்கை எட்ட உதவினர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்களில் ஹொக்காட், பிளின்டொப் ஆகி யோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# சர்வதேச அங்கீகாரம் பெற்ற

## இந்.பெண் கால் பந்தாட்ட நடுவர்

திண்டுக்கலில் நடைபெற்று வரும் 17 வயதுக் குட்பட்ட மகளிருக்கான தேசிய கால் பந்துப் போட்டியில் நடுவராகப் பணியாற்றி வருகிறார் சர்வதேச கால் பந்து கழகத்தின் (பி'. பா) அங்கீகாரம் பெற்ற இந்தியாவின் ஒரே பெண் நடுவர் பென்லா டிகோத். எர்ணாகுளத்தைச் சேர்ந்த இவர், 1988 முதல் ஆர்வத்துடன் கால் பந்தாட்டத்தைக் கற்று 6 முறை இந்தியாவுக்காக ஆடியுள்ளார். 3 முறை ஆசியக் கோப்பைப் போட்டியிலும் விளையாடியுள்ளார்.

1995 ஆம் ஆண்டு மூன்றாம் பிரிவு நடுவராகத் தகுதி பெற்ற பென்லா, 2000 ஆண்டில் தேசிய நடுவராகத் தேர்வு பெற்றார். அடுத்த ஆண் டிலேயே சர்வதேச கால்பந்துக் கழகநடுவராக அங்கீகாரம் பெற்றார்.

# பங்களாதேஷ் அணிக்கு முதல் டெஸ்ட்

## சில பாடங்களைக் கொடுத்திருக்கும்!

### முன்னாள் கிரிக்கெட் வீரர் ரவி சாஸ்திரி



தாகா டெஸ்ட் போட்டி பங் களாதேஷ் அணிக்கு சில பாடங் கள் கற்றுத் தந்திருக்கும் என்று நம்புகிறேன். அந்த அணி டெஸ்ட் வெற்றி பெறுவது பற்றி யோசிக்க வேண்டுமானால், சில அடிப்படை விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் குறைந்த பட்சம் 200 ஓட்டங்கள் வரைக்குமாவது அணிக்குச் சேர்த்துத் தரவேண்டும். பிடி வாய்ப்புக்களை தவறவிடுவது பெரிய ஆபத்து. பயிற்சியாளர் டேவ் வட்மோர் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்துவார் என்று நம்புகிறேன். இவ்வாறு முன்னாள் இந்திய முன்னணி கிரிக்கெட் வீரரும், தற்போதைய தொலைக்காட்சி நேர்முகவர்ணனையாளருமான ரவி சாஸ்திரி தெரிவித்தார்.

இந்திய அணியைப் பொறுத்தவரை தன்னம்பிக்கை அதிகரித்துக் கொள்ள உதவும் அருமையான வெற்றி. குறிப் பிட்டுச் சொல்ல வேண்டிய வீரர்கள் மூன்று பேர். முதலில் இர்பான் பதன் மிக அருமையான பந்து வீச்சை வெளிப் படுத்தினார்.

இரு இன்னிங்ஸ்களிலும் சேர்த்து 11 விக்கெட் வீழ்த்தி அசத்தி விட்டார். கபில் தேவுக்குப் பிறகு விக்கெட் வீழ்த்தக்கூடிய அபாயகரமான பந்து வீச்சை முதல் ஓவரில் இருந்தே வீசும் திறன் கொண்ட ஒரே இந்திய பந்து வீச்சாளர், எனக் குத் தெரிந்தது இவர் மட்டும்தான் பந்தை ஸ்பின் செய்யும் திறமை யும் இயல்பாகக் கொண்டுள்ளனர்.

அடுத்து சச்சின் டெண்டுல்கர், அனில் கும்ளே இருவருமே புதிய சாதனைகளைத் தங்கள் பெயரில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஸ்பின்துறையைப் பொறுத்த வரை அனில் கும்ளே இந்தியாவின் மிகச்சிறந்த சுழல்பந்துவீச்சாளர். அதில் மாற்றுக் கருத்தே இருக்காது. இன்னும் அவர் பந்து வீச்சில் அபாயகரமான சுழல் இருப்பது பிரமிக்கச் செய்கிறது.

சச்சின் டெண்டுல்கரைப் பொறுத்தவரை சமீப காலமாக அவரது துடுப்பாட்டம்பற்றி நிறைய விமர்சனங்கள் வந்தன. தாகாவில் அடித்த இரட்டைச் சதம் அனைத்து விமர்சனங் களுக்கும் அழுத்தமான முற்றுப்புள்ளி வைத்திருக்கும் என்று நம்புகிறேன். முதல் 50 ஓட்டங்களைக் கடந்த பிறகு பங்களாதேஷ் பந்து வீச்சாளர்களுக்கு அவர் எந்த வாய்ப்பும் தரவில்லை. இனி வரும் போட்டிகளில் அவரது ஆட்டம் இன்னும் மெருகு கூடும் என்று நம்புகிறேன்.

# யூரோ கிண்ணக் கால்பந்தாட்டம்


## எதிரிகளுக்குச் சவால் விடும் ஐரோப்பிய கழகங்கள்

யூரோ கிண்ண கால்பந்தாட்டத்தில் பங்கு பற்றத் தகுதியைப் பெறும் குழுநிலைப் போட்டிகள் நடை பெற்று வருகின்றன. இத் தொடரில் ஆர்சனல் அணி யும், செல்சியா அணியும் தகுதி பெற மஞ்செஸ்ரர் யுனைட்டட், லிவர்பூல் அணிகள் தோல்வியுற்றன.

மொத்தமுள்ள 16 கழகங்களுள் செல்சியா, பார்சலோனா, றியல்மொரிட், மிலான்சைட்ஸ், யுவன்டஸ்யோான மியுனிச் ஆகியனவே அடங்கு கின்றன.

இதற்கிடையில் மான்யுனைட்டட் அணியின் சேர் அலெக்ஸ் பெர்குசன் இத்தாலியன் மான்யுனைட்ட் அணியை வென்று விடுவோம் என்று சூளுரைத்துள்ளார். செல்சியா தனது பரம எதிரியான பாசலோனாவைசந்திக்கத் தயாராக இருப்பதாகவும், எல்லா அணிகளும் தாமே சம்பியன் என்று கூறிக் கொண்டு போட்டிகளில் களமிறங்கியுள்ளன.

எமது எதிரி யாராகவிருப்பினும் யூரோ இறுதிப் போட்டியில் நாமே வெல்வோம் என ஸ்பெயின் வீரர் யோஸ்ரியென் தெரிவித்துள்ளார்.



### சிந்தனைக்கு

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## ஜே.வி.பி.யின் நிராகரிப்பு!

"சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை நாம் அல்ல. விடுதலைப்புலிகளே" என்று ஜே.வி. பியின் பொதுச்செயலாளர் ரில்வின்சில்வா, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தலைமைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஜே.வி.பி. சமாதானப் பேச்சு வார்த்தைக்கு இடையூறு விளைவிப்பதாக இவ் உதவி வழங்கும் நாடுகள். சனாதிபதி சந்திரிகாவிற்கு தெரிவித்த கருத்துக்களை ஆட்சேபிக்கும், நிராகரிக்கும் வகையிலேயே ரில்வின்சில்வா இத்தகையதொரு கடிதத்தை எழுதியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் முட்டுக்கட்டை போடுகின்றது. நிபந்தனை விதிக்கின்றதெனக் கூறும் பேரினவாதக் கட்சி ஜே.வி.பி மட்டும்தான் என்பதல்ல. கடந்த காலத்தில் இலங்கையை ஆட்சிசெய்த அனைத்துச் சிங்களக் கட்சிகளும் இவ்வாறு கூறத்தவறில்லை. ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவருமே அதாவது ஐ.தே.கட்சியும் சரி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சரி, இனப்பிரச்சினை விடயத்தில் என்றுமே அரசியற்தீர்வு விடயத்தில் அக்கறை கொண்டவையாக இருக்கவில்லை.

ஆனால் இவ்விரு கட்சிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தயாராகியிருந்தமை ஏதோ மனிதாபிமானத்தின் மீதான உயர்ந்த மனித அடிப்படை உரிமைகள் பற்றியதான விழிப்பின் பாற்பட்டதோ அல்ல. இனப்பிரச்சினைக்கு இராணுவரீதியிலான தீர்வு காண முடியாத நிலைப்பாட்டின் காரணமாகவே அவை பேச்சுவார்த்தைக்கு இணங்கின.

ஆயினும், ஐ.தே.முன்னணி அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் செயற்பட்ட சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை போட்டார். ஜே.வி. பியுடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றிய அவர் தற்பொழுது பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளார். இதற்கு ஜே.வி. பியின் பேச்சுவார்த்தைக்கு எதிரான நிலைப்பாடே காரணமாகும். சனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தையை விரும்புகிறரோ இல்லையோ ஆனால் பேச்சுவார்த்தைக்குப் போதல் என்பது அவர் ஆட்சியைப் பணயம் வைக்கும் ஒன்றாகியுள்ளது. இது குறித்து மிரட்டலைக் ஜே.வி.பி. வெளிப்படையாகவே விடுத்துள்ளது.

இதன் காரணமாக அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பாக மீண்டும் ஆரம்பப் புள்ளிக்குப் போவதோடு அரசாங்கத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டதான வகையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளது. அதாவது அரசாங்கத்தின் நிபந்தனைக்கு உட்பட்டதான வகையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல் வேண்டும். என்பதாகும்.

அதாவது, ஜே.வி.பி.யோ, இடைக்காலதன்னாட்சி அதிகாரசபை குறித்த பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான கோரிக்கை தனியரசிற்கான அடித்தளமாகிவிடும் எனக் கூச்சல் இடுகின்றது. ஆனால் ஜே.வி.பி சில கள யதார்த்தங்களைக் கருத்திற்கொள்ளாது உள்ளது.

அரசாங்கத்தின் இந்நிலைப்பாடானது இதுவரையில் இடம் பெற்றதான சமாதான முயற்சிகளையும் காணப்பட்ட முன்னேற்றங்களையும் நிராகரிப்பதாகின்றது. இதனை விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. கடந்த அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் இடைநிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலதன்னாட்சி அதிகாரசபையின் நகல் திட்டத்தின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.

விடுதலைப் புலிகளின் இந்நிலைப்பாடு சர்வதேச சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகவே உள்ளது. ஏனெனில் விடுதலைப்புலிகள் இதனை ஒரு நிபந்தனையாக வைத்து பேச்சு வார்த்தை மேசைக்குச் செல்லவில்லை. பேச்சுவார்த்தை மேசையில் இடம்பெற்றவற்றை அடிப்படையாகக் கொண்டே இதனை முன் வைத்தனர். அதேசமயம் சர்வதேச நடைமுறையில் விடுதலைப் புலிகளின் இக்கோரிக்கை புதுமையானதல்ல.

இந்நிலையில், இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபையொன்று உருவாக்கப்படுமானால் அது தனியரசிற்கான அடித்தளமாகிவிடும் எனக்கூறுவது விளங்காத்தனமானது. ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கனவே தனியரசிற்கான அடித்தளத்தை இட்டுள்ளனர். ஆகையினால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் புலிகளை அணைத்துச் செல்லும்வரையிலேயே தனியரசு என்பது தவிர்க்கப்படக்கூடியதானதாக இருக்கும்.

அடுத்ததாக விடுதலைப்புலிகளுக்கும்-சிறிலங்கா அரசிற்கும் இடையில் மீண்டும் ஒரு யுத்தம் ஒன்று தொடங்குமானால் அது விட்ட இடத்தில் இருந்தே தொடங்கப்படும். ஆரம்பத்தில் இருந்து தொடங்கப்படப் போவதில்லை. இதனையும் அவர்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இந்த நிலையில், அனைத்துமே விட்ட இடத்தில் இருந்து தொடங்கப்படுவதாகவும், நிறுவப் பட்டவை பாதுகாக்கப்படும் வகையில் செயற்பாடு அமைகையில் பேச்சுவார்த்தைகளை மட்டும் தொடக்கத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என ஜே.வி.பி கோருவது சமாதானப் பேச்சவார்த்தைகளுக்கான முட்டுக்கட்டையாக இல்லாது வேறு எதுவாக இருக்க முடியும்.?

# தீவிரவாதிகளை விசாரணையின்றி தடுத்து வைப்பது சனநாயக விரோதம்

-பிரிட்டிஷ் மேல்சபை தெரிவிப்பு

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் விசாரணைகளின்றி தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை சனநாயகத்திற்கு விரோதமானது என அந்நாட்டுமேல் சபையான பிரபுக்கள் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்ப்பானது பிரிட்டனின் தீவிரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது. 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்கத் தாககுதலை யடுத்து தீவிரவாதத்தைத் தடுக்க பிரிட்டன் அரசு கொண்டு வந்த சட்டத்தின்படி கடந்த 3ஆண்டுகளாக சிறையிலிருந்து வந்த 9 வெளிநாட்ட வர்கள் செய்த முறைப்பாட்டையடுத்தே பிரிட்டன் பிரபுக்கள் சபை இந்தக் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

# வைரஸ் காய்ச்சலினால் மாத்தறையில் நால்வர் பலி

இதுவரை கண்டுபிடிக்க முடியாத வைரஸ் நோய் மாத்தறை மாவட்டம் எம்பிலிப்பிட்டிய பகுதியில் பரவி உள்ளது. கடும் காய்ச்சல் உடம்புநோ, நெஞ்சுவலி மூச்சுத்திணறல் இந்த நோயின் அறிகுறி என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந் நோயினால் தற்பொழுது எம்பிலிப்பிட்டிய வைத்தியாலையில் நான்கு நோயாளிகள் இறந்துள்ளனர்.

இந்தக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள வேறு சிலர் கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு இடம் மாற்றப் பட்டுள்ளனர்.

எனினும் இந்தக் காய்ச்சல் தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லையென்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மீண்டும் யுத்தம் செய்யும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லையாம்

-அனுரபண்டாரநாயக்க கூறுகின்றார்-

மீண்டும் யுத்தம் செய்யும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லையென்று அமைச்சர் அனுர பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டை பிளவு படுத்தாமலும் எந்தவொரு சமூகத்தினருக்கும் அநீதி இழைக்காமலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றதென்றும் அவர் கூறியுள்ளார். சனாதிபதி சந்திரிகா பதவியேற்ற 10 ஆண்டு கால பூர்த்தியைக் குறிக்கும் முகமாக கேகாலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற வைபம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தர். அவர் மேலும் தெரிவிக்கையில்', மக்களுக்கு அனுகூலமான வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பித்துள்ளதனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்களென்றும் இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதென்றும் அமைச்சர் அனுர பண்டாரநாயக்க சுட்டிக் காட்டினார்.

இந்த வைபவத்தில் பிரதியமைச்சர் ரஞ்சித் சியம் பலப்பிட்டியவும் கலந்துகொண்டாா.

-சட்டவிரோதமாக சொத்துச் சேர்த்த குற்றச் சாட்டு-

## எஸ்.பி.திஸாநாயக்கவை நீதி மன்றில் ஆஜராக உத்தரவு

சட்டவிரோதமாகச் சொத்துச் சேர்த்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் தொடரப்பட்டுள்ள வழக்குச் சம்பந்தமாக எஸ்.பி.திஸாநாயக்க இம் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு மேல் நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரத்தை பரிசீலனை செய்த பின்னர் கொழும்பு மேல் நீதி மன்ற நீதவான் இந்த அழைப்பாணையை விடுத்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் 2001 ஆம ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் சட்டபூர்வமான தமது வருமானத்தைப் பார்க்கிலும் கூடுதலாக 2 கோடி 90 இலட்சம் ரூபாவை சம்பாதித்துள்ளதாக எஸ்.பி.திஸாநாயக்க மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# மீனவர்களுக்கான ஒய்வூதியத் திட்டம் அரசாங்கம் அறிவிப்பு

2005 ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் இலங்கையில் 1,50,000 மீனவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

18 வயது தொடக்கம் 59 வயது வரை ஓய்வு ஊதியம் வழங்கும் திட்டத்தில் இணையலாம். இவர்கள் 2720 ரூபாவை செலுத்தி அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ள முடியும். அவர் 60 வயதைப் பூர்த்தி செய்தால் 4164 ரூபா மாதாந்த ஓய்வு ஊதியத்தை பெற்றுக் கொள்வார். 55 வயது தொடக்கம் 59 வயது வரை ஓய்வு ஊதியத்தில் அங்கத்துவம் பெற்றால் மாதம் ஒன்றுக்கு ரூபா 3000 அவருக்கு வழங்கப்படும். இவர்களுக்கு ரூபா 50,000 ஆயுட் காப்புறுதி செய்யப்படும். இது சம்பந்தமாக மீன்பிடி அமைச்சு அல்லது பிரதேச மீன்பிடி காரியாலயங்களின் விண்ணப்பம் செய்ய முடியும் என மீன் பிடித் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

# உலக உணவுத் திட்டம் அன்பளிப்புச் செய்த மா புறக்கோட்டை விற்பனை நிலையத்தில்

உலக உணவுத் திட்டத்தினால் நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சிற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட கோதுமைமா மூடைகளை சந்தையில் விநியோகிப்பதற்காக கொண்டு சென்றபோது மஸ்கெலியப் பொலிசார் கண்டு பிடித்துள்ளனர். இதன்போது சந்தேகத்திற்குரிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, புறக்கோட்டை 5ஆம் குறுக்குத்தெருவில் உள்ள வியாபார நிலையமொன்றிலிருந்த கோதுமைமா மூடைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யபப்பட்ட மூவர் கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பிரதான நீதவான் குசலாசரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

## ஐ.தே.க.விலிருந்து தான் நீக்கப்பட்டமை சட்ட விரோதமென ரோஹித்த வழக்குத் தாக்கல்

அமைச்சர் ரோஹித போகொல்லாகம ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து தான் நீக்கப்பட்டது சட்ட விரோதமானதென்ற பேரில் மேல் நீதிமன்றத்தில் நேற்று மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் தவிசாளர் மலிக்கெமுனுவிக்கிரம, செயலாளர் என்.டி.கே.கே வேதகொட மற்றும் இருவரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான யாழ்.இளைஞன் பிணையில் விடுவிப்பு!

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் மூன்று வருட சிறைத்தண்டனையின் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். இதற்கான அனுமதியினை கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தனது வீட்டில் இரண்டு குண்டுகளை மறைத்து வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்ட செல்லத்துரை ரஞ்சன் (வயது-26) என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த இளைஞன் பொலிசார் ஊடாக யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்த சமயம் தப்பியோடியிருந்தார். எனினும் பின்னர் கைது செய்யப்பட்டிருந்த போதும், சிறையில் இருந்து தப்பியோடிய குற்றச் சாட்டின் பேரில் மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனையை யாழ்.நீதவான் பிறப்பித்தார்.

இதனையடுத்து களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் தற்போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றில் பிணை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இம்மனு மீதான விசாரணையின் போதே பிணையில் விடுவதற்கான மேன்முறையீட்டு நீதிமன்றம் யாழ். நீதிமன்றத்திற்கு பிறப்பித்திருந்தது. இதனையடுத்து 20 ஆயிரம் ரூபா ஆட்பிணை மற்றும் சரீரப்பிணையில் இளைஞனை செல்வதற்கு யாழ்.நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதித்தது. (27)

## பரீட்சைக்கு தோற்ற முடியாவிடின் பெயரைப் பதிவு செய்யக்கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த.(சா.த) பரீட்சைக்கு மழை காரணமாக யாராவது பரீட்சைக்கு தோற்ற முடியாது போயிருந்தால் அவர்கள் எதிர் வரும் 21.12.2004ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் பின்வரும் ஆவணங்களுடன் தமது பெயரைப் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. அரியரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார். அதாவது மாணவர்களின் பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் அடையாள அட்டை என்பவற்றை கொண்டு வந்து பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (கு)

## வல்வைப்பாலம் இன்று இரவு முற்றாக மூடப்படும்

திருத்த வேலைகளுக்காக வல்வைப்பாலம் இன்று இரவு முற்றாக மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று இரவு 8.00 மணி முதல் நாளை காலை 5.00 மணிவரை வல்வைப்பாலம் ஊடான போக்குவரத்துத் தடைசெய்யப்படுவதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த பாலப்பகுதியை அகற்றி புதிய பாலம் ஒன்றை நிறுவும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கேதுவாக தற்காலிக பாலத்தைப்பொருத்தும் வசதிக்காகவே இன்று இரவு போக்குவரத்து நடவடிக்கைகள் துண்டிக்கப்படுவதாகத் தெரியவருகிறது. இதற்கான அறிவிப்புப் பலகைகள் பாலப்பகுதியினில் தொங்கவிடப்பட்டும் உள்ளது. இதனிடையே இப்பால திருத்த வேலைக்கான இருப்பிலான தற்காலிக இணைப்புப் பாலத்தின் பகுதிகள் ஏற்கனவே அங்கு எடுத்து வரப்பட்டுள்ளது.(27)

## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கலாம்

தமக்கு மானியம் வழங்காது போனால் உடனடியாக எரிபொருட்களின் விலையை உயர்த்த வேண்டும் என பெற்றோலியத்துறை தொடர்பான உபகுழு திறைசேரிக்கு பரிந்துரைத்துள்ளது. இந்தக் குழுவில் பெற்றோலிய திணைக்களம், இந்திய ஐ ஓ ஏ நிறுவனம் ஆகியன அங்கம் வகிக்கின்றன. இந்த நிலையில் இவை விடுத்திருக்கும் வேண்டுகோளில் மானியமாக கோடிக்கணக்கான தொகையை வழங்க முடியாது போனால் எரிபொருட்களின் விலையை உயர்த்த வேண்டும் எனக்கேட்டுள்ளன. இந்த நிலையில் பெரும்பாலும் எதிர்வரும் சனவரிக்கு முன்னதாக எரிபொருட்களின் விலைகள் உயர்த்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது (32)

## இலத்திரனியல் வாக்களிப்புமுறை இலங்கையில் அறிமுகப்படுத்தத்திட்டம்!

இலங்கையில் இலத்திரனியல் (கணினி ஊடாக) வாக்களிப்பு முறை அறிமுகப்படுத்தப்படவிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தகவல் வெளியிட்டுள்ளார்.

நேற்று தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் மகாநாட்டில் இலத்திரனியல் வாக்களிப்பு முறை பற்றி இந்திய நிறுவனமொன்றின் உதவியுடன் செய்முறை விளக்கமளித்தார். இலத்திரனியல் வாக்களிப்பு முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டால் ஒவ்வொரு தேர்தலிலும் ரூபா 22 கோடி மீதப்படுத்த முடியும். மோசடிகளைத் தடுக்க முடியும், தேர்தல் முடிவுகளைத் தாமதமின்றி வெளியிட முடியும், குறைந்தளவு ஊழியர்களே தேர்தல் பணிகளுக்கு தேவைப்படுவார்கள் என்றும் கருத்துக் கூறப்பட்டது. இயந்திரமொன்றின் விலை ரூபா 22 ஆயிரம் மட்டுமே என்றும் குறிப்பிட்ட தேர்தல் ஆணையாளர், இந்த வாக்களிப்பு முறையை அமுற் படுத்துவதற்கு முதல் தேர்தல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கதையாடல் அரங்கப்பட்டறை

தமிழர் புனர்வாழ்வுக் (TRO) கழகத்தின் ஒழுங்கமைப்பில் யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் இணைப்பாளர்களுடன் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் இன்றும் நாளையும், கதையாடல் அரங்கப்பட்டறை ஒன்றினை மானிப்பாய் வீதி தியாக சீலன் பூங்காவில் அமைந்துள்ள முன்பள்ளிப் பயிற்சி நிலையத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நடத்துகின்றனர்.

இதன் போது முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை, முன்பள்ளி நடைமுறைகளில் பெற்றோரின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான திறன்களை வளர்த்தல், பிள்ளைகளின் திறன்களை வளர்த்தல் போன்ற முக்கிய விடயங்கள் கதையாடப்படவுள்ளன.

### இந்திய...

பொலிம் கடற்படை விமானத் தளத்தில் தரையிறக்கப்பட்ட விமானத்தின் விமானி பரசூட் ஊடாக உயிர்தப்பியதாக அறிய முடிகிறது.

விமானத்திற்குச் சிறுசேதம் ஏற்பட்டதாகவும் விமான நிலையத்தில் உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்த அவசர தீயணைப்புப் படையினரால் விமான நிலைய செயற்பாடுகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாகவும், விமான ஓட்டி அதிர்ச்சியில் மயக்கமுற்று இராணுவ மருத்துவமனையில் விசேட சிகிச்சைபிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

### திருவாதிரை உற்சவம்

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவிலில் மார்கழி மாத திருவாதிரை உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இவ் உற்சவத்தில் காலை 9.00 மணிக்கு திருவெம்பாவை ஓதலும், காலை 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து திருவீதியுலாவும் நடைபெறும்.

எதிர்வரும் 26-12-2004 ஞாயிற்றுக்கிழமை பஞ்சரத பவனியும், மறுநாள் அதிகாலை 2.00 மணிக்கு ஆருத்திரா அபிஷேகமும், மாலை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

### யாழ்...

மற்றும் தீவகப் பகுதிகளிலும், சமாதான நடவடிக்கைகளை வலுப்படுத்தக் கோரும் வெகுசனப் போராட்டங்களை நடாத்த ஏற்பாடுகள் துரித கதியினில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கைக்குண்டு...

கருதப்படும் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை சத்துருக்கொண்டான் கடலில் கரையொதுங்கியுள்ளது.

இது ஒருபுறமிருக்க காலி துறைமுகத்தை வீடியோ படம் பிடித்த நபரொருவர் நேற்றுமுன்தினம் மாலை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை களுபோவிலவைச் சேர்ந்த 50 வயதுடைய டபிள்யு.கே.யுவராஜ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## எஸ்.பி.யை விடுவிக்கக்கோரி நாளை கொழும்பில் கூட்டம்

சிறையில் உள்ள எஸ்.பி திஸாநாயக்கவை விடுவிக்கக் கோரும் கூட்டம் ஒன்று கொழும்பு ஹைட் பார்க் கோணரில் நாளை நடைபெறவுள்ளது. சனநாயகத்தைப் பாதுகாக்கும் அமைப்பு, இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

எனவே அன்றைய தினம் சனநாயகத்தை பாதுகாக்கும் நோக்கிற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் இணைய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எஸ்.பி.திஸாநாயக்கவை விடுவிக்கக்கோரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரணி தற்சமயம் மாவனல்லையில் இருந்து வரக்காபொல வரையில் தமது நகர்வை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ விஜயரட்ன தகவல் அளிக்கையில், எஸ்.பி திஸாநாயக்கவை விடுவிக்கும் வகையில் ஹிங்குராங்கத்தையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி தற்சமயம் மாவனல்லையை கடந்து கொண்டிருக்கிறது. பெருமளவான மக்கள் இதில் பங்கேற்றுள்ளார்கள். எனவே இது அரசாங்கத்துக்கு பாரிய சவாலை விடுக்கும் ஒரு பேரணியாக இருக்கப் போகிறது எனத் தெரிவித்தார்.

இதேவேளை சிறையில் அடைக்கப்பட்டுள்ள எஸ்.பி திஸாநாயக்க இன்று மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படவுள்ளார். அரசியல் கைதியென்ற அடிப்படையிலேயே இந்த வழக்கமான பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக அவர் ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார். இதனையடுத்து அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு.ஜெயசூரிய அரசாங்கத்திடம் கோரியுள்ளார். (32)

## முஸ்லிம் கட்சிகள் இணைந்து சமாதானச் செயலகம் அமைக்கமுடிவு

இருபிரதான முஸ்லிம் கட்சிகளாகிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும், தேசிய ஐக்கிய முன்னணியும் முஸ்லிம்களுக்கான சமாதானச் செயலகம் ஒன்றை அமைப்பதென ஒரு உடன்பாட்டிற்கு வந்துள்ளன. இச்சமாதானச் செயலகத்தின் குறிக்கோளாக சமாதான முன்னெடுப்புகளில் முஸ்லிம்களை பிரதிநிதிப் படுத்தவும், முஸ்லிம்களின் குரலை ஒன்றாக ஒலிப்பது எனவும் கூறப்பட்டுள்ளது.

## தேசிய இணக்கக்குழுவின் சமய சம்பந்தமான குழுக்கூட்டம்

சமாதானம் தொடர்பிலான தேசிய இணக்கக்குழுவின் சமய சம்பந்தமான இரண்டாவது குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களின் செயலர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வடக்கு கிழக்கின் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பில் முன்னுரிமை வழங்குதல் மற்றும் அனைத்து மதத் தலைவர்களும் உள்ளடங்கிய உபகுழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதேவேளை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் வகையில் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

## 24 மணி நேரம் பணிபுரியும் சுகாதார சேவையினருக்கு சம்பள உயர்வு இல்லை

### - எதிர்த்துப் புறக்கணிப்புப் போராட்டம்

வரவு செலவுத்திட்டத்தின் கீழ் சுகாதார சேவையினருக்கு சம்பள உயர்வு வழங்கப்படாமையை அடுத்து அதற்கு எதிராக பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளப்போவதாக சுகாதார சேவை தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது. ஏனைய அரசாங்க தொழிற்துறையினருக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்ட போதும் 24 மணித்தியாலங்களாக சேவையாற்றும் சுகாதார சேவையினருக்கு அது வழங்கப்படாமையானது சட்டவிரோதமாகும் இதேவேளை இது தொடர்பாக தாம் நிதியமைச்சருடன் பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்கி தருமாறு கேட்டுக்கொண்ட போதும் அதற்கு உரிய பதில் வழங்குவதில் இருந்து அவர் தம்மை தவிர்த்து வருவதாக சுகாதார சேவையினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (32)

குமரகுரு புடைவை அழகுப்பொருள்

வாணிபத்தினரின் வாடிக்கையாளர் கவனத்திற்கு!

குமரகுருவின் வாடிக்கையாளர் அட்டைகளை பெற்றுள்ளோர் பொருள் வாங்கி உறுதிப்படுத்தப்பட்ட சிட்டைகள் பதியாது வைத்திருப்போர் 30.12.2004 இற்கு முன் பதிவினை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். எங்களது வாடிக்கையாளர்களின் பரிசளிப்புவிழா தை மாதத்தில் நடைபெற இருப்பதனால் வாடிக்கையாளர்கள் அனைவரும் உங்களது பதிவுகளை மேற்கொண்டு தங்களின் பரிசுகளை உறுதிப்படுத்துமாறு வேண்டுவதோடு குமரகுரு வாணிபத்தினரின் தீபாவளி மடல் கிடைக்காத வாடிக்கையாளர்கள் தங்களது முகவரியை உடன் வந்து சீர்செய்யும்படி வேண்டப்படுகின்றனர்.

குமரகுரு புடைவை
அழகுப்பொருள் வாணிபத்தினர்
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி.10943) T.P.021-2265971

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது